பக்கங்கள் 16+8
விலை ரூ. 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 98

ஞாயிற்றுக்கிழமை
03 மார்ச் 2024

மாசி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



## சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

# தமிழர் தாயகத்தில் இன்று துக்கதினம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கை - இந்திய அரசுகளின் கூட்டுச்சதியால் கொல்லப்பட்ட சாந்தனின் திருவுடல் தமிழர் தாயகத்துக்கு இன்று எடுத்துவரப்படவுள்ளது. அவரது திருவுடலுக்கு வவுனியா முதல் தீருவில் வரை பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேநேரம் இன்றையதினம் தமிழர் தாயகத்தில் துக்கதினம் கடைப்பிடிப்பதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

15

### அஞ்சலி ஒழுங்கமைப்பு

- காலை 8 மணி – வவுனியா
- காலை 9 மணி – மாங்குளம்
- மு.ப. 10.30 மணி – கிளி. பசுமைப் பூங்கா
- பி.ப. 2 மணி – தீருவில்
- நாளை திங்கட்கிழமை – எள்ளங்குளம்

## எந்தத் தேர்தல் முதலில்? சந்திப்பின் பின்னர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர், நாட்டில் முதலில் எந்தத் தேர்தல் என்பது தொடர்பில் அரச தரப்பில் இருந்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய

15

## வடக்கு மீனவர்கள் இன்று கடலில் கறுப்புக்கொடிப் போர்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரம் படகுகளில் செல்லும் 4 ஆயிரத்து 500 மீனவர்கள் இன்று கடலில் கறுப்புக் கொடிப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின்

15

## யாழ். பல்கலையில் கறுப்புக்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 3

சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக வளாகம் எங்கும் நேற்றுச் சனிக்கிழமை கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (அ-ஒ-66)

## இந்தியத் துணைத்தூதரகம் முற்றுகையிடப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் எம்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

14

### முச்சந்தி முரளி



"அப்ப நாளைக்கு கடலும் கறுப்பா மாறி துக்கம் கொண்டாடப்போகுது போல"

## மோ.சைக்கிள் விபத்து; காயமடைந்தவர் சாவு

முல்லைத்தீவு, மார்ச் 3

மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதியதில் காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு

14

## பொன் அணிகளின் போர் சமநிலையில் நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 107ஆவது துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

107ஆவது பொன் அணிகளின் போர் துடுப்பாட்டப் போட்டி நேற்றுமுன்தினம் காலை 9 மணி

15




சஞ்சீவி
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கல்லூரி அதிபர் நியமனம்

# பதவியேற்கவிடாமல் தடுப்பது சட்டவிரோதம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 3

**மத்திய கல்லூரி அதிபர் நியமனம் முறைப்படி இடம்பெற்றும் அவரைப் பதவியேற்க விடாமல் பதில் அதிபர் தடுப்பது சட்டவிரோதம் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன், யாழ். மத்திய கல்லூரி அதிபர் விவகாரம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 2 அல்லது 3 ஆக இருந்தாலும் சரியான நிலைப்பாட்டில் யார் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவை வழங்கமுடியும். தனிப்பட்ட ரீதியில் எவர் சார்பிலும் நாங்கள் முடிவு எடுப்பதில்லை.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் நியமனம்முறைப்படிஇடம்பெற்றிருக்கின்றது. அதிபர் நியமனம் தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வின் ஊடாக அதிபர் தெரிவு இடம்பெற்றிருக்கின்றது.

மத்திய கல்லூரியின் பதில் அதிபராக இருந்தவரின் நியமனம் தற்பொழுது வறிதாக்கப்பட்டிருக்கின்றது. புதிய அதிபர் நியமனம் இடம்பெற்ற பின்னரும் கூட பதில் அதிபர் தொடர்ச்சியாகச் செயற்படுகின்றார் என்றால் அவருக்குப் பின்னால் ஏதோ ஒரு தரப்பு இருக்கின்றது என்பது தெட்டத் தெளிவாகத்தெரிகின்றது. பதில் அதிபராக இருப்பவருக்கு கல்வி அமைச்சோ அல்லது பொதுச் சேவை ஆணைக்குழுவோ இதுவரை எந்தக் கடிதங்களும்வழங்கியதாகத்தெரியவில்லை. அதிபர் நியமனம் இடம்பெற்ற பின்னரும் பதில் அதிபராக இருந்தவருக்குத் தொடர்ச்சியாகச் செயற்படுமாறு எந்தவித கட்டளைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் என்ன அடிப்படையில் இவர் தொடர்ச்சியாகப் பதில் அதிபராக இருக்கின்றார் என்பது தெரியவில்லை.

இது முழுக்க முழுக்க சட்டவிரோதமான செயற்பாடு. தகுதியான அதிபரை பதவியேற்கவிடாமல் பதில் அதிபர் சட்டவிரோதமான முறையில் தடுத்துக் கொண்டிருக்கின்றார். அரசியல் பின்புலம் இல்லாமல் இது எவ்வாறு நடைபெற முடியும்? என்று அவர் மேலும் கேள்வி எழுப்பினார். (ஓ-125)



## தொழில் வழிகாட்டல் நிகழ்வு

மன்னார், மார்ச் 3

நானாட்டான் பிரதேசசெயலகம் மற்றும் அட்ரா நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த தொழில் வழிகாட்டல் மற்றும் தொழிற்சந்தை நிகழ்வுகள் நானாட்டான் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

நானாட்டான் பிரதேசசெயலாளர் சிவசம்பு கனகாம்பிகை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன் கலந்து கொண்டார். (ப-56)

## செவ்விளநீருக்கு யாழில் கிராக்கி

யாழ். குடாநாட்டில் செவ்விளநீருக்கு கிராக்கியும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய கடும் வறட்சியான காலநிலையால் செவ்விளநீரின் பாவனை அதிகரித்துள்ளது.

ஒரு செவ்விளநீர் 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

அதேவேளை வெளிநாடுகளுக்குச் செவ்விளநீர் ஏற்றுமதி செய்து வருவதனால் தெற்கிலிருந்து குடாநாட்டுக்கு செவ்விளநீர் எடுத்து வரப்படுவதும் குறைந்துள்ளது என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (ச-17)

## வலம்புரிச் சங்குடன் இருவர் கைது!

திருகோணமலை, மார்ச் 3

வலம்புரிச் சங்குடன் இருவரை முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினர் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

திருகோணமலை கப்பல்துறைப் பகுதிக்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் வலம்புரிச் சங்குடன் 40 வயது மதிக்கத்தக்க இருவரை கைது செய்து திருகோணமலை சீ-நோர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஓ-125)

## விதிமுறைக்கு அமைவாக யாரும் அதிபராக முடியும்

### மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

கல்வி அமைச்சு மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் விதிகளுக்கு அமையவே அதிபர் நியமனம் இடம்பெறவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - இவ்வாறு யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் நியமனம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும்போதே மேற்கண்டவாறு பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: -

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் என்பது 1909ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இன்று வரை அந்தச் சங்கம் எதுவித பிரச்சினையும் இன்றித் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது. புதிய பதில் அதிபர் பதவியேற்றதன் பின்னர் சில காரணங்களுக்காக 'பழைய மாணாக்கர் சங்கம்' என்ற பெயரில் இன்னொரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தச் சங்கத்துக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. அவர்கள் உருவாக்கியது பழைய மாணாக்கர் சங்கம். இது கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். இது சம்பந்தமான வழக்குக் கூட தற்பொழுது நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது. பழைய மாணவர் சங்கமாகிய நாங்களே தற்பொழுது புதிதாக உருவாக்கப்பட்ட பழைய மாணாக்கர் சங்கத்துக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம்.

பழைய மாணவர் சங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் இவர்தான் அதிபராக வரவேண்டும், அவர்தான் அதிபராக வரவேண்டும் என்று எந்த ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில் சட்டதிட்டங்களுக்கு அமைவாக கல்வி அமைச்சினதும், பொதுச் சேவை ஆணைக்குழுவினதும் விதிகளுக்கு அமைவாக ஓர் ஒழுங்கு முறையிலே தெரிவுசெய்யப்பட்ட அதிபர் வரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அவ்வாறானவரை நாம் ஆதரிப்போம் - என்று குறிப்பிட்டனர். (ஓ-125)

நீர்வேலியில்

## 7 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்!

நீர்வேலியில்கடந்ததிங்கட்கிழமைமுன்னெடுக்கப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது 117 இடங்கள் சோதனையிடப்பட்டன.

இந்தச்சோதனை நடவடிக்கையில் 43 குடியிருப்புகள் போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்டன. அதில் ஏழு குடியிருப்புகளை உடன் துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது.

அதேவேளை மூன்று குடியிருப்புகளில் நுளம்புக் குடம்பிகள் அவதானிக்கப்பட்ட நிலையில் குடியிருப்பாளர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

## பாலைதீவு அந்தோனியார் பெருவிழா திருப்பலி

யாழ்ப்பாணம், மார்ச் 3

பூநகரி, பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய பெருவிழா கொடியேற்றத்துடன் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

பெருவிழாவில் குருநகர், பாஷையூர், நாவாந்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த அதிகளவான மக்கள் பங்கேற்றனர்.

நேற்று சனிக்கிழமை புனிதரின் திருச்சொரூப பவனியுடன் திருவிழா நிறைவுபெற்றது. (ச-17)

## தேசிக்காய் விலை சரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். குடாநாட்டில்தேசிக்காயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய காலநிலையில் தேசிக்காய் அதிகளவில் சந்தைக்கு வருகின்றது.

தேசிக்காய் கிலோ 80 ரூபா முதல் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஒரு தேசிக்காய் 60 ரூபா முதல் 75 ரூபாவரையில் விற்பனைசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

## உடைமையில் ஹெரோய்ன் இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 3


மானிப்பாய்ப் பகுதியில் ஒரு கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞரை மல்லாகம் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய கடந்த திங்கட்கிழமை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றம் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தற்போதும் மனித உரிமை மீறல்கள்!

- நீதிக்கான சூழல் இலங்கையிலில்லை
- பொறுப்புக்கூறலில் முன்னேற்றமில்லை
- பாதுகாப்புத்துறையில் மறுசீரமைப்புத் தேவை
- புதிய சட்டங்களால் அச்சுறுத்தல்கள்
- ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் 'பளார்'



கொழும்பு, மார்ச் 3

இலங்கையில், உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலும், நம்பகரமான நீதியைத்தேடும் சூழல் அங்கு நிலவவில்லை. மனித உரிமை மீறல்கள் தற்போதும் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர்தனது அதிருப்தியைத்தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது அமர்வு தற்போது நடைபெற்று வருகின்றது. இலங்கை, கம்போடியா, கவுதமாலா, ஹொண்டுராஸ், நியாகுரா மற்றும் சைப்ரஸ் நாடுகள் தொடர்பான தனது அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் வெளியிட்டார். இதிலேயே இந்த விடயத்தை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

**இலங்கையில் தற்போதும் மனித உரிமை மீறல்கள்**

இலங்கையில் தற்போது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் நான் ஆழ்ந்த கவலை கொண்டிருக்கின்றேன்.

கடந்தகால துயர்நிறைந்த வரலாற்றுக்குப் பொறுப்புக்கூறும் விதத்திலான நடவடிக்கைகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, மனித உரிமை மீறல்கள் தற்போதும் அங்கு இடம்பெறுகின்றன. உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துவதில் கூடப் பாதுகாப்புப் படையினரின் இறுக்கமான கண்காணிப்பு இலங்கையில் நிலவுகின்றது. இதனால், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

**பொறுப்புக்கூறலில் பலவீனம்**

இலங்கை அதன் பொறுப்புக்கூறல் பணிகளில் தொடர்ந்தும் பலவீனமாகவே செயற்பட்டு வருகின்றது. பொறுப்புக்கூறலுக்காக 'உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு' அமைக்கப்பட்டுள்ள போதிலும் நம்பகரமான நீதியைத் தேடும் பொறிமுறை அங்கில்லை. காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம் இன்னும் தீர்க்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட உறவுகள் தங்களின் அன்புக்குரியவர்களைத் தொடர்ந்தும் தேடிக்கொண்டிருக்கின்றனர். பேரழிவுகரமான ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு இடம்பெற்று கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் உண்மையையும் நீதியையும் தேடுகிறார்கள்.

உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், நம்பகமான உண்மையைக் கண்டறியும் செயல்முறைக்கான சூழல் இல்லை. கடந்தகால மனிதஉரிமைமீறல் தொடர்பான சட்டங்களால் ஒருபோதும் நீதியை நிலைநாட்ட முடியாது. நீதியைத் தேடுவதற்காக இறுக்கமான மற்றும் ஆத்மார்த்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். இலங்கையில் தீவிரமான மனிதஉரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் நம்பத்தகுந்ததாக குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து வலுப்படுத்த உறுப்பு நாடுகளை நான் கேட்டுக்கொள்கிறேன்

**பாதுகாப்புத்துறைக்கு மறுசீரமைப்புத் தேவை**

இலங்கையில் பாதுகாப்புத்துறையானது முழுமையாக மறுசீரமைக்கப்படவேண்டும். இராணுவ சித்தாந்தங்களுடனான நடவடிக்கைகள் இலங்கையில் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேல், நீதிமன்றங்களால் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டவர்களுக்கு அரச நியமனங்களை குறிப்பாக பாதுகாப்புத் தொடர்பான உயர் நியமனங்களை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இது இலங்கையின் சூழ்நிலையை மேலும் மேலும் அச்சமாக்குகின்றது. இலங்கையில் பாதுகாப்புத்துறை விரிவான சீர்திருத்தத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி அதற்காகப் பரிந்துரைக்கின்றேன்.

**புதிய சட்டங்களால் அச்சம்**

இலங்கையில் அண்மைக்காலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டங்கள், சட்டத்தின் ஆட்சியைப் பலவீனப்படுத்துகின்றன. சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றின் மீது அதீத தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டம் அமைந்துள்ளது. அது ஜனாதிபதிக்கு மட்டற்ற அதிகாரங்களை அச்சப்படும் வகையில் வழங்குகின்றது. ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றையும் இந்தப் புதிய சட்டங்கள் கடுமையாகப் பாதிக்கின்றன. அது தொடர்பில் எனது அலுவலகத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், நானும் கரிசனை கொண்டுள்ளேன்.

**இலங்கையர்களுக்கு உதவுங்கள்**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. இதனால் இலங்கையர்கள் வீதிக்கு இறங்கினார்கள். இலங்கை அரசாங்கம் பொருளாதார மீளெழுச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதிலும், இலங்கையர்களை வறுமை துரத்தவே செய்கின்றது. கடந்த வருடம் நாட்டின் வறுமை வீதம் (வறியோர் வீதம்) 27.9 என்றவாறாக உயர்ந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச்செலவு அங்கு அதிகரித்திருக்கின்றது. இவ்வாறிருக்கையில் இலங்கைக்கு உங்களின் உதவிகளை வழங்குமாறு சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் கடனாளிகளின் நிதி மற்றும் ஆதரவை இலங்கைக்கு வழங்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கிறேன் - என்றுள்ளது. (ம)

பெப்ரவரி 29

## லீப் வருடத்தில் ஐந்து சிசுக்கள்

பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி (லீப் வருட நாளில்) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஐந்து சிசுக்கள் பிறந்துள்ளன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

லீப் வருடத்தில் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி பிறக்கும் குழந்தைகள் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவையே தங்களின் 'உண்மையான' பிறந்த நாளைக் கொண்டாடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-125)

## புலம்பெயர்வாளர்கள் வாக்கிட பச்சைக்கொடி

கொழும்பு, மார்ச் 3

தேர்தல்களின்போது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் வாக்களிக்க அனுமதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு தேர்தல்கள் ஆணையாளர் சாதகமான பதில் அளித்துள்ளார் என்று சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தொழில் நிமித்தம் பல இலங்கையர்கள் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களை விட இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற பலரும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என சிவில் அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயலொக் முதன்முறையாக வடக்கின் பொன்னணிகள் போர் மாபெரும் கிரிக்கெட் போட்டிக்கு அனுசரணையை வழங்குகிறது

இலங்கையின் முன்னணித் தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. வடக்கின் 107 ஆவது பொன்னணிகள் போர் மாபெரும் கிரிக்கெட் போட்டிக்கு அனுசரணை வழங்கியது.

பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டிகளின் 2024 ஆம் ஆண்டு பருவத்துக்கான அனுசரணைகளை டயலொக் நிறுவனம் பெருமையுடன் அறிவித்து வருகிறது. இலங்கை பாடசாலை மட்டக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்கால கிரிக்கெட் நட்சத்திரங்களை உருவாக்கும் அடித்தளமாக இருப்பதோடு அவை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இலங்கை கிரிக்கெட்டுக்கு வலுவூட்டுவதாகவும் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் பாடசாலையில் பயிலும் மாணவர்களும் பழைய மாணவர்களும் ஒன்றுகூடி தமது கிரிக்கெட் மோகத்துக்குத் தீனி போடும் பருவம் இந்த மார்ச் மாதம் எனலாம். நாடெங்கும் கிரிக்கெட் திருவிழா போல் கொண்டாடப்படும் இந்தப் பருவத்தில் பெருமதிப்புமிக்க ஏழு மாபெரும் கிரிக்கெட் போட்டிகளுக்கு டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. பெருமை யுடன் அனுசரணை வழங்குகிறது. பாடசாலை கிரிக்கெட் மரபை இப்போட்டிகள் மூலம் போற்றி கொண்டாட்டத்துக்குக் குறைவின்றி இருக்கும் அதே வேளை திறமைசாலி களைக் கண்டெடுக்கும் களமாகவும் இவை அமைகின்றன.

இதில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன்னணிகள் போர் மாபெரும் கிரிக்கெட் போட்டி வட மாகாணத்தில் நூற்றாண்டு பாரம்பரியம்மிக்க கிரிக்கெட் போட்டியாக அமைந்துள்ளது. இந்தப் போட்டி மார்ச் 1 மற்றும் 2ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இவ்வாண்டுக்கான போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு சிதம்பரலிங்கம் நர்த்தனன் தலைமை தாங்கவுள்ளதோடு சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அணியை றொபின்சன் ஷியான்த்ஸன் தன் தலைமையில் வழிநடத்தினார். 1917 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வரும் இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 35 போட்டிகளில் வெற்றிபெற்று முன்னிலை வகிப்பதோடு யாழ்ப்பாணக் கல்லூரி 16 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. 30 போட்டிகள் சமநிலையாக நிறைவடைந்தன. ஓர் ஆட்டம் இரத்துச் செய்யப்பட்டது. 24 போட்டிகளுக்கான முடிவுகளின் விவரங்கள் கிடைக்கவில்லை.

கடந்த முறை யாழ்ப்பாணம் பொன்னணிகள் போர் இரண்டு நாள் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வெற்றியீட்டி நடப்புச் சம்பியன் பட்டத்துடனேயே இம்முறை தொடரில் களமிறங்கியது.

டயலொக் ஆசிஆட்டா இலங்கை தேசிய கிரிக்கெட், கரப்பந்து, வலைப்பந்து மற்றும் ஈஸ்போர்ட்ஸ் அணிகளுக்கான பெருமைமிகு அனுசரணையாளராக செயற்பட்டு வருவதுடன், இலங்கை பகிரங்க கொல்ஃபிற்கு பிரதான அனுசரணையாளராகத் திகழ்வதுடன், பரா ஒலிம்பிக் விளையாட்டுகளில் தேசிய பரா விளையாட்டுகளுக்கும் உலக பரா விளையாட்டுகளில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கும் அனுசரணை அளிக்கிறது.

இவற்றுடன் நாளைய வெற்றியாளர்களை வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டம், தேசிய கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வலைப்பந்து போட்டிகள், பாடசாலை ரக்பி ஆகியவற்றுக்குத் தொடர்ந்து அனுசரணை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படும். பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**இடபம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டி வரும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு தாமதமாகும். சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. எதிர்பார்த்த காரியம் அலைச்சலையும் செலவுகளையும் ஏற்படுத்தினாலும் முடிந்துவிடும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும். சற்றுக் கவனமாக இருக்கவும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். கடன்கள் விஷயத்திலும் சற்றுக் கவனம் செலுத்தவும். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டா கும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். பிரச்சினைகளை சமாளிக்கவேண்டி வரும். காரியங்கள் சாதகமாக முடியும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும். மகிழ்ச்சி தரும் நாள். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

## சந்தையில் தேங்காய் திருடி வியாபாரியானவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 3

மருதனார்மடம் சந்தையில் தேங்காய் மூடைகளைத் திருடினார் என்று திருநெல்வேலிச் சந்தையில் பிடிக்கப்பட்ட நபர், நையப்புடைக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மருதனார்மடம் சந்தையில் தேங்காய் விற்கும் ஒருவர் ஐந்து மூடைகளில் தேங்காய் வைத்திருந்துள்ளார். நேற்றுமுன்தினம் காலை வியாபார நடவடிக்கைக்காகச் சென்றபோது, சந்தையில் வைத்திருந்த மூடைகளைக் காணவில்லை. இதுதொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்தத் தேங்காய் வியாபாரி சந்தேகத்தில் திருநெல்வேலிச் சந்தைக்குச் சென்று நோட்டமிட்டுள்ளார். அங்கு ஒருவர் அந்த மூடைகளை வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததை அவதானித்துள்ளார்.

சந்தேகநபர் அங்கிருந்தவர்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஏற்கனவே பல வழக்குகளுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-125)

## கசிப்புடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 3

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இளைஞர் ஒருவரைச் சோதனையிட்டபோது அவரிடம்இருந்து 750மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-125)

## மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 3

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக 9 வேப்ப மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதடிப் பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரி பொ.ப.ஜெயரூபன் தலைமையிலான குழுவினராலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ப-27)

## கீரைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

வலி.கிழக்கில் கீரைச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, இடைக்காடு, ஊரெழு பகுதிகளில் கீரைச் செய்கை பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை சந்தைகளில் கீரை ஒரு பிடி 80 ரூபா வரையில் சரிவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தெழும் சஹ்ரான் குழு? காத்தான்குடியில் 30 பேர் கைது!

காத்தான்குடியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாக ஒன்றுகூடிய 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் முக்கிய மான பங்கு வகித்த தாகக் கைது செய் யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சஹ்ரான் ஹசீமின் சகோதரியின் கணவர் உட்பட 30 பேரே புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட வர்கள் சஹ்ரானின் கொள்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒன்று கூடினார்களா என்ற சந்தேகத்தின் அடிப் படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## கட்டடம் வாடகைக்கு
சாவகச்சேரி நகரில் BOC வங்கிக்கு அருகில் கடைத் தொகுதியின் இரண்டாவது தளம் (1650 Sqft) வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 620 5628

## மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்.
தொடர்புகளுக்கு: 077 334 1281

## காணி விற்பனைக்கு
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 076 089 1961

## விற்பனைக்குண்டு
தச்சு வேலைக்காக பயன்படுத்தும் மிசின் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 077 111 8413

## வீடு, காணி விற்பனை
வட்டுக்கோட்டை தெல்லிப்பளை வீதியில் யாழ்ப்பாணக் கல்லூரி, அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றுக்கு அண்மையில் வீட்டுடன் கூடிய 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
077 943 4738
011 273 2175

## விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் உள்ள ஒருகைப் பாவனையிலிருந்த (தாய்லாந்துத் தயாரிப்பு) 5KV டீசல் ஜெனறேற்றர் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 822 9128
021 2230 753
(CS 28070) A-1

## தேவை
வீட்டுப் பணிப்பெண் தேவை
தொடர்பு:
077 0698 105
(CS 28069) A-1

## வீடு வாடகைக்கு
யாழ் நகரின் மத்தியில் சகல வசதியுடன் கூடிய வீட்டின் மேல் மாடி வாடகைக்கு உண்டு.
அத்தியடி புது வீதி NO -28
076 103 1503

## வேலைக்கு ஆட்கள் தேவை
பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை மற்றும் சிறியரக வாகனம் கூட்டுடன் தேவை.
தொடர்புகளுக்கு: 070 625 6123

## வேலையாட்கள் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கும் பிரபல மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
காசாளர் - ஆண்/பெண்
உதவியாளர் - ஆண்
பழுதுபார்த்தல், சேவிஸ் - ஆண்
தொடர்பு: 077 620 5628

## உடனடி விற்பனைக்கு
பாவித்த நல்ல நிலையிலுள்ள CCTV கமரா Full Set, குளிர் சாதனப் பெட்டி, Microwave Oven, மிக்சி, ஒற்றைக்கட்டில், மரமேசை, Dressing Table, குழந்தை தள்ளுவண்டி, நீல நிற சிலிண்டர், உடனடி விற்பனைக்கு.
தொடர்பு: 077 400 2382
(CS 28071) A-1

## பியர் போத்தல் தேவை
பியர் போத்தல் கொள்வனவு செய்யப்படும்.
**நல்ல நிலையில் உள்ள போத்தல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும்.**
(CS 28079) J-1
தொடர்பு:- 077 711 1999

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான வீதி முகப்புடன் நான்கு (04) நிலப்பரப்புக் காணிவிற்பனைக்கு உண்டு.
சகல ஆவணங்களுடன், சிவப்பு மண், நன்னீர் ஊற்று, கிருஷ்ணர் கோவில் அருகாமை, தரகர் தேவையில்லை.
தொடர்பு:
077 638 5683, 075 638 5684
(CS 28078) S-1

## கண்ணீர் அஞ்சலி




அமரர் சந்திரமோகன் சம்மந்தபிள்ளை

யாழ் சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரமோகன் சம்மந்தபிள்ளை அவர்கள் கடந்த (20.02.2024) செவ்வாய்க்கிழமை அன்று பிரித்தானியா லண்டனில் காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**சோமசுந்தரம் குடும்பம் (சித்தப்பா)**
**சுரேஷ் குடும்பம்** (MASS FRAMES, Chavakachcheri)
(CS 28072) S-1

## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி அருமைநாயகம்**

சுன்னாகம் கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருமைநாயகம் கடந்த (01.03.2024) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் மூத்த மகனும், துரைரத்தினம் - யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், வத்சலாவின் கணவரும், ஜெனோஷன், காலஞ்சென்ற ஜெறூஷன் ஆகியோரின் தந்தையும், தம்பிரத்தினம், பத்மாவதி, ஆனந்தகௌரி பட்டம்மாள், கெங்காதரன், லலிதாம்பிகை, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சசிகலா, ரமணன், காலஞ்சென்ற கௌரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
மகன் - 075 944 8104
பெறாமகன் - 076 5522 148
(CS 28082) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## தோலுரிக்கப்பட்ட இலங்கை!

இலங்கை அதன் பொறுப்புக்கூறல் கடமைகளில் தொடர்ந்தும் பலவீனமானதாகவே செயற்படுகின்றது. 'உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு' அமைக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையைக் கண்டறியக்கூடிய அல்லது நீதியை நிலைநாட்டக்கூடிய சூழல் இலங்கையில் இப்போதில்லை என்றவாறாகத் தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது அமர்வு தற்போது இடம்பெற்று வருகின்றது. இதில், இலங்கை தொடர்பான தனது வாய்மொழி அறிக்கையை முன்வைக்கும்போதே வோல்கர் இந்தக் கருத்தை - தன் நிலைப்பாட்டை - பகிரங்கப்படுத்தியுள்ளார்.

தனக்கு எதிரான போர்க்குற்றங்களை எதிர்கொள்வதற்காக இலங்கை கடந்த சில மாதங்களாகவே கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது. அதில் ஒன்றுதான், தென்னாபிரிக்காவை முன்மாதிரியாகக் கொண்ட 'உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை' அமைக்கும் முயற்சியாகும். தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவெறிக்குத் தீர்வு காண்பதற்காக இந்த ஆணைக்குழுவை அமைக்கும்போது, அந்த ஆணைக்குழுவின் சுயாதீனச் செயற்பாட்டையும், நீதியைநிலைநாட்டுவதற்குரிய வாய்ப்புகள் மற்றும் சந்தர்ப்பங்களையும் தென்னாபிரிக்கா ஆழமாக உறுதிப்படுத்தியது. தென்னாபிரிக்காவைப் போன்ற 'இயங்குதளம்' இலங்கையில் இல்லை என்பதால், இங்கு அமைக்கப்படும் 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்' சுயாதீனச் செயற்பாடுகள் மற்றும் நீதியைக் கண்டடைவதற்கான செல்நெறிகள் தொடர்பில் பெரும் விவாதப்புள்ளியும் ஐயக்குறியுமே எஞ்சியிருந்த நிலையில், 'உண்மையைக் கண்டறியக்கூடிய அல்லது நீதியை நிலைநாட்டக்கூடிய சூழல் இலங்கையில் இப்போதில்லை' என்ற கருத்தை காலக் கண்ணாடியாக வெளிப்படுத்தும் வகையில் தான் வோல்கரின் கருத்துகள் அமைந்துள்ளன.

அதுமட்டுமல்லாமல், புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டம், பாதுகாப்புத்துறைக்குள் செய்யப்பட வேண்டிய சீரமைப்புப் பணிகள் என்பன தொடர்பிலும் வோல்கர் தன் அதிருப்தியைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். இலங்கை அதன் வெளிவிவகாரக் கொள்கையைத் திருத்தியமைத்து, அணிசேரா நாடுகளை அரவணைத்து தனக்கான ஆதரவுத் தளத்தைப் புதிதுபுதிதாக ஏற்படுத்தி வேறுபட்ட பயணப்பாதையில்பயணித்துக்கொண்டிருந்ததால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது அமர்வு தொடர்பில் ஒருவித பயம் 'பாதிக்கப்பட்ட சமூகமான' ஈழத்தமிழர்கள் மட்டில் இருக்கவே செய்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வோல்கரின் பிடிதளரா நிலை, ஈத்தமிழர்களுக்கு ஓர் ஆறுதல் பெருமூச்சே.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுக்கமான பிடிக்குள் இருந்து திமிறித் திரிய இலங்கை காலாகாலமாக முயன்று கொண்டிருப்பதும் பட்டவர்த்தனமானதே. சட்டவியாக்கியானங்கள், அணிகளைச் சேர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் என்பவற்றை தன் 'அவகாச மனோநிலையின்' பாற்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கிக் கொண்டிருப்பதுதான் இலங்கைக்கான பிடிமானங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. இதை உணர்ந்து 'அவகாசத்தை வழங்கும் அட்சய பாத்திரம்போன்று' ஐ.நா. செயற்படக்கூடாது என்பதுதான் ஈழத்தமிழர்களின் இப்போதைய எதிர்பார்ப்பு.





# அரச ஊழியர்கள் எஜமானர்கள் அல்லர்

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 3**

**அரச ஊழியர்கள் எஜமானர்கள் அல்லர். அவர்கள் பொதுமக்களின் சேவகர்களே என்று சுட்டிக்காட்டியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.**

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான உத்தியோகபூர்வ இணையத்தளங்களை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கைதடியில் உள்ள பிரதம செயலர் அலுவலகத்தில் நடைபெற்றது. உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக மக்கள் மயப்படுத்தும் நோக்குடன் புதிய இணையத்தளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்களுக்கு காணப்படும் அதிகாரங்களுக்கமைய மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்க வேண்டும். உள்ளூரில் காணப்படும் வளங்களைக் கொண்டு தங்களுக்கான வருமானங்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் திரட்டிக் கொள்ள வேண்டும்.

தற்போது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்பட்டுள்ள நிலையில், தங்களின் தேவைகளுக்குப் போதுமான நிதியை அந்தந்த சபைகளே திரட்ட வேண்டும். அதேநேரம் மக்களுக்கு சிநேகமான முறையில் தங்களின் சேவைகளை வழங்கவேண்டும் - என்றார். (எ-26)

## மூடப்படவுள்ள சப்புகஸ்கந்த

கொழும்பு, மார்ச் 3

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின்நாளாந்த செயற்பாடுகள் 45 நாள்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளன என கனிய வளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளது.

சர்வதேச முறைமைகளுக்கு அமைய, 45 நாள்களுக்கு சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கட்டாய தேவைகளுக்காக மூடப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## அதிக வெப்பநிலை மக்களுக்கு எச்சரிக்கை

நாட்டில் தற்போது வெப்பநிலை அதிகரித்து வருவதால் மக்கள் உடலின் நீரேற்ற அளவுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

உடலில் நீரிழப்பு நமது ஒட்டுமொத்த ஆரோக்கியத்துக்கும், குறிப்பாக நமது சிறுநீரகத்துக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## விமானசேவை அதிகரிப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தேசிய விமான சேவை நிறுவனமான 'எதிஹாட்' இலங்கைக்கானவிமானசேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. இதுவரை 10 விமான சேவைகள் நடைபெற்ற நிலையில் தற்போது 13 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (எ-இ)

## இலங்கையில் ரஷ்யக் கப்பல்

ரஷ்யாவின் கடற்படைக்குச் சொந்தமான போர்க்கப்பல் ஒன்று உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பலில் 529 பேர் பணியாற்றுகின்றனர் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இரு நாட்டு கடற்படைக்கும் இடையிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சில முக்கியமான வேலைத்திட்டங்களில் அவர்கள் பங்கேற்கவுள்ளனர். கப்பலில் வந்தவர்கள் நாட்டின் பல இடங்களுக்கும் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் இன்று நாட்டை விட்டு வெளியேறவுள்ளது. (எ-இ)

## நாளை

04.03.2024
**திங்கட்கிழமை**
மாசி–21
சுபநேரம் : 12.26 - 01.56
ராகுகாலம் : 07.56 - 09.26

## நாளொரு நல்வார்த்தை


அறிவு உங்களுக்கு
அதிகாரத்தை வழங்கலாம்
குணம் தான் மரியாதையைப்
பெற்றுத்தரும்.
– புரூஸ் லீ –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்பும்

## யா/நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

### அதிபர்



### உயர்திரு. சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள் ( SLPS II )

- ஆரம்பக்கல்வி :- யா/ நீர்வேலி சி.சி.த.க பாடசாலை
- இடைநிலை, உயர்தரம் :- யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி.

**சேவை விபரம்**

- ஆசிரியர் நியமனம் :- 28.03.1990 – 18.11.2007 யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.
- அதிபர் நியமனம் :- 19.11.2007 – 02.03.2024 யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை

### ஆசிச் செய்தி



**"நீர்வை மணி"**
**சிவஸ்ரீ.கு.தியாகராஜக் குருக்கள்**
**நீர்வேலி செல்லக்கதிர்காம கோவில்.**

திருவாளர்.சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்களுக்கு 03.03.2024 அன்று மணிவிழா நிகழ்வை முன்னெடுக்க இருப்பதறிந்து பேருவகையடைகிறோம். நீர்வேலி றோ.க.த.க பாடசாலையின் அதிபராக பதினெட்டு ஆண்டுகளாக பெரும்பணியாற்றி பணிநிறைவு காணும் தர்மரத்தினம் அவர்கள் முன்னரே நீர்வேலி அத்தியார் இந்துவில் ஆசிரியராக பணி செய்தவர். அவரது மனையாளும் ஆசிரியை ஆவார. திரு.திருமதி தர்மரத்தினம் தம்பதியரும் அவர்தம் குடும்பத்தாரும் சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வெய்த இறையருளைச் சிந்தித்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

"வேலுண்டு வினை இல்லை"

### வாழ்த்துச் செய்தி



**திரு.தி. ஜோன் குயின்ரஸ்.**
**மாகாண கல்விப் பணிப்பாளர்.**
**வடக்கு மாகாணம்.**

யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலையின் அதிபர் திரு. சின்னத்தம்பி தர்மரத் தினம் அவர்கள் நீர்வேலி மண்ணின் கல்வி வளர்ச்சிக்காக 34 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் அர்ப்பணிப்பாக சேவையாற்றியவராவார். அரச சேவையில் உள்ளவர்கள் ஓய்வு பெறுவதென்பது காலத்தின் கட்டளை ஆனால் அவர்கள் தம் சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகள் காலம் காலமாக அவர் பெயரை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். இப்பாடசாலை ஆசிரியர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் மலர்க்குழுவினருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு இளைபாற்று கைக்காலம் சிறப்பாகஅமைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது சேவையை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் மணி விழாமலர் சிறப்புடன் வெளிவரவும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு. பொ. ரவிச்சந்திரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் கல்வி வலயம்.**

அகவை அறுபதை நிறைவு செய்து சீரான சேவையை முழுமைப் படுத்தி மணி விழாக்காணும் நீர்வேலி றோ.க.த.க பாடசாலையின் அதிபரும் சிறந்த பண்புள்ளவரும். கல்வியாளருமான ஆளுமை யுள்ள அதிபர் திரு. சின்னத்தம்பி தர்மரட்ணம் அவர் களுக்கு எனது மனம்நிறைந்த வாழ்த்துக்கள். எனது கல்வி வலயத் தில் சிறந்த அதிபராக. பண்பான மனிதராக இவரைநான் பலமுறை பார்த்திருக் கின்றேன். பாடசாலை நலனிலும். மாணவர்களின் கல்வியிலும். ஆசிரியர்களின் கடமைசார்ந்த விடயங்களிலும் இவரின் பங்கு அளப்பரியது. நல்லாசிரியராக. ஆளுமையுள்ள அதிபராக. கிராம மக்களால் விரும்பப்படும் சிறந்த நிர்வாகியாக இவரது பணி சிறந்து விளங்கியது. திரு. தர்மரத்தினம் அவர்கள் ஓய்வை ஓய்வாகக் கழிக்காமல் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் எனக்கேட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு.நா.சிவனேசன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோப்பாய்க்கோட்டம்**

திரு சின்னத்தம்பி தர்மரத்தினம் பிறவியிலேயே நல்ல ஆசிரியர் நல்ல அதிபராகப் பிறந்தவர். இவர் எந்த கடமையைப் பொறுப்பளித்தாலும் உரிய நேரத்தில். உரிய வகையில்.உரிய தரத்தில் நேர்த்தியாக நிறைவேற்றக் கூடியவர். ஆசிரியராக. அதிபராக இருந்த பாடசாலைகளில் சக ஆசிரியர் களுடன் நட்புறவை பேணியவர். 2007 ஆம் ஆண்டு யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்றதன் பின் கல்வி எழுச்சி மட்டுமன்றி மைதானம் உட்பட்ட பௌதிக வளங்களும் விருத்தி பெற்றன. அதிபர் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி எல்லா நலன் களும் பெற்று அருளோடும் பொருளோடும் குடும்பத்தாருடன் ஆனந்தமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திருமதி ரேவதி குமரஸ்ரீ**
**உப அதிபர்,**
**யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை.**

கடந்த பதினேழு ஆண்டுகளாக பாடசாலையையும் சமூகத்தையும் ஒன்றிணைத்து சமூகத்தின் தேவையாகிய கல்வி வளர்ச்சியில் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி வரலாற்றில் அழியாத கல்வி அபிவிருத்தியை நிலை பெறச் செய்துள்ளார் எமது இன்றைய மணிவிழா நாயகர் திரு. சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள். மாணவர் களை மிகுந்த அன்புடனும் கண்டிப்புடனும் வழி நடாத்திச் செல்லும்பண்புடன் சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவர். நேர காலம் பாராது பாடசாலைக் காலம் முழுவதும் சேவையினை இப் பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணித்தமையானது இவரின் சேவைக் காலத்தின் சிறப்பினை மைற்கல்லாக எடுத்துரைக்கின்றது இவரது ஓய்வுகாலம் எல்லாம் வல்ல இறையருளுடன் சீரும் சிறப்புமாக அமைந்து குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழ எனது வாழ்த்துக்களினைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்

### வாழ்த்துச் செய்தி



**திருமதி சாந்தினி வாகீசன்**
**செயலாளர், கோப்பாய் கோட்ட அதிபர் சங்கம்**
**அதிபர் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்.**

நீர்வேலிக் கிராமத்தின் சிறந்த கல்விக் கூடங்களில் ஒன்றாக மிளிர்வது யா/நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இப் பாடசாலையின் அதிபராக இருந்து சிறப்பான பணியாற்றியவர் திரு.சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள். கோப்பாய் கோட்ட அதிபர் சங்க பொருளாளராகவும் உறுப்பின ராகவும் நீண்டகாலம் இருந்து எந்தக்கரியத்தையும் திறம்பட செய்து முடிப்பவர். சிறந்த முகாமைத்துவத் திறன் கொண்டவர் அயற் பாடசாலை அதிபர்களுடன் சிறந்த தொடர்பு களைப் பேணி வருபவர். கல்வித்துறையில் சிறப்பான சேவையாற்றி மணிவிழா நாயகன் தமது ஓய்வுக் காலத்தில் சமூகப் பணிகள் புரிந்து நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

### ஆசிச் செய்தி



**அருட்பணி பா.பி.இராசசிங்கம்.**
**பங்குத்தந்தை**
**புனித பரலோக மாதா ஆலயம்.**

யாழ் /நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் திரு.சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள் தனது கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் இத்தருணத்தில் அவரது சேவையை பாராட்டி வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். இப்புனிதமான கல்விக்கூடத்தில் தலைமை ஆசிரியர் பொறுப்பேற்று மாணவர்களுக்கு சிறந்த பணி யாற்றி பல மாணவர்களை கல்வியாளர்களாக உயர்த்திய வெற்றிக்களிப்போடு தனது பணியிலிருந்து ஓய்வு பெறும் அதிபர் திரு. சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்களுக்கு என் மனம் நிறைந்த ஆசிகளைத் தெரிவித்து நிற்கின்றேன். அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தாங்கள் கல்விக்கு ஆற்றக் கூடிய பணிகள் இன்னும் பல உண்டு என்று கூறி என் வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு. வே.கா.கணபதிப்பிள்ளை**
**முன்னாள் அதிபர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,**
**மணிவிழாக் குழுத் தலைவர்.**

திருவாளர் சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்களின் மணிவிழா தொடர்பாக அம்மணி விழாவின் தலைமைப் பொறுப்பில் செயல்படுகின்றவன் என்ற வகையில் எனது மனமார்ந்த வாழுத்துக்களை தெரிவிப்பதில் புளகாங்கித மடைகின்றேன். திருவாளர் தர்மரத்தினம் எனது அயலவன். ஊரவன். நம்பிக்கையானவர். எதனையும் சாதுரியமாக நிறைவேற்றக் கூடியவர், கருமமே கண் எனக் கொண்டு எல்லோருக்கும் உதவும் பண்பாளர் ஆவார். திரு.தர்மரத்தினம் அவர்கள் தன் இனிய பாரியாரோடும், பிள்ளைகளோடும் சகல நலன்களும் வளங்களும் கிடைக்கப்பெற்று எதிர்காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ இறையருள் வேண்டிப் பிரார்த்திப்பதோடு எனது இதய பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.


### வாழ்த்துச் செய்தி



**திரு. இ.குணநாதன்**
**ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்**
**நீர்வேலி.**

அகவை அறுபது பூர்த்தியடைந்து இன்று மணிவிழா காணும் திரு.சி.தர்மரத்தினம் அவர்களுடன் 2002ம் ஆண்டிலிருந்து நெருங்கிப்பழகி வருகின்றேன். 2002.ல் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நான் அதிபர் பதவியை ஏற்றபோது அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த விழா நாயகர் 2007.11.18 வரை எனது பணிக்கு வலது கரமாகச் செயற்பட்டார்.. மாணவர்களின் கற்பித்தல் பணியில் தன்னை முழுமையாக தயார்படுத்தி செயற்பட்டவர். கல்லூரி நிர்வாகப்பணிகளில் பகுதித் தலைவர், முகாமைத்துவகுழு. ஒழுக்காற்றுச் சபை ஆகிய அனைத்து பணிகளிலும் பொறுப்புணர்வோடு செயற்பட்டு எனது பணிகளுக்கு உந்து சக்தியாக செயற்பட்டவர் ,இன்றைய மணிவிழா நாயகர். நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் 19.11.2007 அன்று அதிபர் பதவியை பொறுப்பேற்ற மணிவிழா நாயகர் திரு.சி.தர்மரத்தினம் அவர்கள் ஓய்வு பெற்ற நேற்றைய நாள் வரை பாடசாலையின் உயர்வுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். . தனது இல்லத்திற்கு அருகிலிருந்து அருள்பாலிக்கும் 'ஒல்லை வேம்படி ஞானவைரவர்' ஆலயத்தின் தலைவராக தெய்வத்தொண்டாற்றி வருகின்றார். இந்த வகைகளில் பல்துறை ஆற்றல் கொண்ட பல்பரிமாணம் நிரம்பிய அதிபர் திரு.சி.தர்தரத்தினம் அவர்களுக்கு மனம் நிறைந்த பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கின்றேன். அவர் தனது துணை வியார். பிள்ளைகளோடு நிறைந்த தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து ஓயவின்றி சமூகத்திற்கு நற்பணிகளாற்ற இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு. சரா.புவனேஸ்வரன்**
**ஆலோசகர்,**
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

பலநூறு சவால்களைக் கடந்து. பணிகளில் மேலோங்கி நிற்கும் உயர்திரு. சின்னத் தம்பி தர்மரத்தினம் அவர்களை வாழ்த்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன். அனைத்திலும் உண்மை உணர்வும், அசைக்க முடியாத துணிச்சலும் கொண்ட இவரது உயரிய பல பண்புகள் கண்டு வியந்திருக் கின்றேன். நல்ல ஆசிரியராக, சிறந்த முகாமையாளராக, பாடசாலையையும். சமூகத்தையும். மாணவக் குழந்தைகளையும் நேசிக்கும் சிறந்த அதிபராகத் திகழ்ந்தவர். ஆசிரியத் தோழனாக உதித்த இவரின் நட்பு தொழிற்சங்கத் தோழனாக குடும்ப நண்பராக தொடர்கின்றது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் நீண்டகாலம் இணைந்திருந்து தனக்காக அல்லாது பிறருக்காக குரல்கொடுத்து வெற்றி கண்டவர். சங்கத்தின் யாழ்ப் பாணக் கல்வி வலயத்தின் தலைவராகப் பணியாற்றியமை சிறப்பானது. நெருக்கடியான காலகட்டத்தில் எனக்குப் புரிந்த உதவிகளை நான் மறப்பதற்கில்லை. எம் சந்ததிக்கும், சமூகத்திற்கும் தொடர்ந்தும் பணிசெய்ய வேண்டும் எனக்கேட்டு. பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு.க.அகிலேஸ்வரன்**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திக் குழு.**

ஒரு கிராமிய பாடசாலையின் கல்வி வழித்தடத்தின் நீட்சியில் அதன் வளர்ச்சியில் பல பாதங்கள் பதிந்திருக்கலாம். ஆயினும் ஆழமாய் பதிந்த ஒரு பாதச்சுவடுதான் எம் முதல்வரின் பாதம். பாடசாலையின் முதுகெலும்பாய் திகழும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளராக நான் எம் முதல்வருடன் நீண்ட காலம் பயணித்திருக்கிறேன். தன் சீரிய கல்வி நிர்வாகத்தின் கீழ் பாடசாலையின் பௌதிக வள உயர்ச்சிக்கும். மாணவ சமூகத்தின் வளர்ச்சிக்கும் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி இருந்தார். முதல்வர் தர்மரத்தினம் என்றால் அது மிகையில்லை. பணி ஓய்வு பெறும் முதல்வர் திரு.சி.தர்ம ரத்தினம் அவர்களின் ஓய்வுக் காலம் சிறக்க இறைவழி வேண்டி வாழ்த்தி நிற்கிறேன்.

### வாழ்த்துச் செய்தி



**பேராசிரியர். தி. வேல்நம்பி**
**சிரேஷ்ட பேராசிரியர்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

யாழ். நீர்வேலி றோ.க.த.க பாடசாலை முதல்வர் திரு.சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள் ஓய்வு பெறும் வேளை சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவருக்கான மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எப்பொழுதும் எளிமையாக விளங்குவார். எல்லோருட னும் அன்பாகப் பழகும் சுபாவம் மிக்கவர். ஆசிரியர் மாணவர்களுடன் மட்டுமன்றிப் பெற்றோர் மற்றும் சமூகத்தினருடன் புரிந்துணர்வு டன் கூடிய நல்லுறவினைக் கட்டி வளர்த்த சிறப்புக்குரியவர். இதன் காரணமாகப் பாடசாலை வளாகம் சிறிய அளவேனும் விஸ்தரிக் கும் வாய்ப்பு அவர் காலத்திலேயே நடந்தேறியது. இவ் ஓய்வு காலத்தில் அவர் தன் குடும்பத்தாருடன் நல்ல ஆரோக்கியத்துட னும், வளத்தோடும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திருமதி வனஜா செல்வரட்ணம்,**
**மாகாணப் பணிப்பாளர்,**
**தொழிற்துறைத் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்.**

எனக்கு அமையப் பெற்ற நல்லாசான்களில் ஒருவர் என்னை வழிப்படுத்திய வர்களில் ஒருவர் எம் உயர்வு கண்டு பேரின்புறும் ஆசான்களில் ஒருவர் இன்று மணிவிழாக் காணும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய திரு.சி.தர்மரத்தினம் ஆசிரியர் அவர்கள் முப்பத்து மூன்று வருடங்களுக்கு மேலாக இன்று வரை அதே தொனியில் அதே கண்டிப்பில் அழைத்து நிற்பவர். இரண்டாம் நிலைக் கல்வியைப் பெற யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நான் கண்ட முதல் வகுப்பாசிரியர் அவர் தான். 8 என்றால் குழப்படியும் கும்மாளமும் நிறைந்த ஆனால் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருக்கும். எம்மை வளப்படுத்தியவர் என்பதில் ஐயமேது மில்லை. இவரின் பணிகள் தொடர்ந்தும் கல்விச் சமூகத்திற்கும் இந்தக் கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் கிடைக்க வேண்டும். அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைவ துடன் அவரது அரும்பணி தொடர வேண்டும். என அவரது மணி விழா நாளில் மனதார இறைவனை வேண்டி அமைகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு.சந்திரமௌலீசன் லலீசன்**
**அதிபர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் திரு.சி.தர்மரத்தினம் அவர்களுடனான தொழில்சார் சந்திப்பு 23 ஆண்டுகளுக்கு முன்னர் எனக்குக் கிட்டியது. அதிபர் என்ற வகிபாகத்துடனும் ஆசிரிய தொழிற் சங்கவாதியாகவும் ஆலயத் தொண்டராகவும் தனது பங்கையும் பணியையும் நிலைநிறுத்தி வருகின்றார். நீர்வேலி றோ.க.த.க. பாட சாலையுடன் இரண்டறக் கலந்த நாமமாக அவரது பெயர் பொறிக்கப் படுவதற்கு அவரது அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும். .எமது கலாசாலை ஆசிரிய மாணவர்கள் கற்பித்தல் பயிற்சிக்காக அவரது பாடசாலையை விரும்பித் தேர்ந்தெடுப்பர். அவர்களுக்குரிய சகலவிதமான உதவிகளையும் வழங்கி அவர்களை ஆற்றுப்படுத்துகின்ற பெருந்தகை யாக திரு. சி.தர்மரத்தினம் அவர்கள் விளங்கினார். கல்வியே கருந்தனம் என ஆற்றிய தொண்டுகளுக்கு தலை சாய்த்து நன்றி நவில்வதுடன் ஓய்வுக்காலம் இனிதே அமையவும் எங்கள் கலாசாலைச் சமூகம் சார்பில் வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு. சகாயநாதன் ஞானம் (செல்வா)**
**கனடா தொழிலதிபர்,**
**Reach Personal Recruitment Service**

நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் திரு. சி. தர்மரத்தினம் அவர்களின் மணி விழா மலரில் என்னுடைய வாழ்த்து செய்தி இடம்பெறுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியையும். உற்சாகத்தையும் தருவதாகும்.18 ஆண்டுகள் எமது பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு. சி. தர்மரத்தினம் அவர்கள் ஆற்றிய சேவையை பல தலைமுறைகள் நினைவில் வைத்திருக்கும். எமது பாடசாலையின் உயர்வுக்கும் இன்றைய வளர்ச்சிக்கும். ஊர்மக்களோடு மக்களாய் இனணந்து திரு. சி. தர்மரத்தினம் ஆற்றிய தொண்டுக்கு எமது ஊர் என்றும் கடமைபட்டிருக்கின்றது. திரு. சி. தர்மரத்தினம் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து எமது மாணவர்களின் வளர்ச்சிக்கும் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என எமது அன்னையாம் பரலோக மாதாவை வேண்டி நிற்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு.க.மதுராந்தகன்**
**தலைவர், ஆசிரியர்கழகம், நீர்வேலி.றோ.க.த.க.பாடசாலை, செயலாளர், மணிவிழாக் குழு.**

ஆசிரியராய். அதிபராய். கல்விச்சாலையில் நீண்ட நெடும் பயணம். அறிவார்ந்த சமூக உருவாக்கத்தின் ஆணிவேராய் மூன்று தசாப்தம் ஆழ வேரோடி நிமிர்ந்த விருட்சம். நீர்வை மண்ணின் தாய் நிலத்தின் அறிவகத்தை தரம் உயர்த்தி அறிவு வாசலை அகலத்திறந்த ஆற்றலோன். எமது அதிபர் திரு. சி.தர்மரத்தினம் அவர்கள் எண்ம யுகத்தின் சவால்களை எம் மாணவரும் முகம் கொடுக்கும் வகையில் கிராமிய பள்ளியில் திறன் வகுப்பறைகளைத் தோற்றுவித்து கல்வியில் சம வாய்ப்பினை உறுதி செய்த ஒரு சாதனையாளனாக முதல்வர் அவர்களை பெருமிதத்துடன் நோக்க முடிகிறது. நேர்மையும் மனித நேயமும் மிக்க தலைமைத் துவ இயல்பைக் கொண்ட ஓர் ஆளுமை நிறைந்த அதிபராக தன் பணிக்காலம் முழுவதும் மிளிர்ந்திருக்கிறார். அவர் ஆற்றிய கல்விப் பணியை போற்றுவதோடு ஓய்வு காலம் உவகையாய் அமைய இறையருள் வேண்டி ஆசிரியர் குழாம் சார்பாக அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு.சி.தவரசா**
**முன்னாள் பாடசாலை அபிவிருத்திக் குழு.**
**செயலாளரும் மணிவிழாக்குழு பொருளாளரும்.**

திறன்மிகு ஆசிரியராக அர்ப்பணிப்பு மிக்க அதிபராக விளங்கி அகவை அறுபதைப் பூர்த்திசெய்து மணிவிழாக்காணும் என் அன்பிற்கும், பெரும்மதிப்பிற்கும் உரிய உயர்திரு. சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள் 2007 ஆம் ஆண்டு நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையில் அதிபராக கால் பதித்த நாள் முதல் இப்பாடசாலையின் உயர்வுக்காக தன்னையே அர்ப்பணித்த பேராசான் இன்று மணிவிழாக்காணும் அர்ப்பணிப்பு மிக்க அதிபர் உயர்திரு.சின்னத்தம்பி தர்மரத்தினம் அவர்கள் தொடர்ந்தும் இப்பாடசாலையின் உயர்வுக்கு வழி காட்டி தனது குடும்பத்தினருடன் நோய் நொடி இன்றி சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமான். காளிகாம்பாள் பாதம் பணிந்து எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பிரசுர அனுசரணை:**
**காசிலிங்கம் யுவநேசன் (நேசன் )**
**பழைய மாணவர்**
**சூரிச், சுவிச்சர்லாந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# கல்லூரிகளின் போர் இன்று!




யாழ்ப்பாணம், மார்ச் 3

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி அணிகளுக்கு இடையில் நடைபெறும் "கல்லூரிகளின் போர் 2024" கால்பந்து போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.. ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு போட்டி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-100)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்., மார்ச் 3

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் தரம் - 5 மாணவத் தலைவி ஹனித்தனா தலைமையில் நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஐ.தேவஈஸ்வரன், தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப் பாளர் திருமதி இராசலட்சுமி மயில்வாகனசிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

(ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ். வடமராட்சி நெல்லியடி நகரப் பகுதியில் அதி சிறந்த நல்ல சூழலில் ஒன்றேமுக்கால் பரப்பு குடியிருப்புக் காணியும், யாழ். சுண்டுக்குழி கச்சேரிக்கு அருகாமையில் நவீன வசதிகள் கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) அறைகளுடன் அழகிய, புதிய மாடிவீடும் விற்பனைக்கு உண்டு.

(தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)

(CS/28053) J-1

070 757 2666, 070 750 2666

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்துக்கு சுத்திகரிப்பாளர் ஆண், பெண் இருபாலாரும் தேவை. பகுதி நேர வேலைக்கு ஆட்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு: 074 056 7791

(CR 42027) A-1

## வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான வாடகைத்தாய் தேவை.

தங்களின் விபரம் இரகசியமாக வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

தொடர்பு: 074 004 7586

(CS/54189) J-1

## மணமகள் தேவை

அந்தணர் குடும்பம் 31 வயது ரேவதி நட்சத்திரம் செவ்வாய் தோசமற்ற பால் பண்ணை உரிமையாளரான மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் பேசித்தீர்மானிக்கப்படும்.

(CS/54182) J-1

021 223 1946, 077 936 1525

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில் 10 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. பயன்தரு மரங்களுடன், குழாய்க் கிணறுடன் கூடிய கட்டடமும் உண்டு.

(CR 42033) S-1

077 418 1980,
003 362 998 0715 (Viber & Whatsapp)

## கோழிப் பண்ணைக்கு வேலையாள் தேவை

JK Poultry Farm அளவெட்டியில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆரோக்கியமான 40-55 வயதிற்கிடைப்பட்ட ஆண் தேவை. தங்குமிட வசதி உண்டு.

முன் அனுபவம் அவசியமில்லை.

மொத்த மாதச் சம்பளம் 100,000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

தகுதிகாண் காலம் 06 மாதங்கள்

விண்ணப்பங்களை Whats app இல் 077 642 5724 என்னும் இலக்கத்திற்கு அனுப்பவும்.

(இந்த இலக்கத்திற்கு அழைப்பு எடுக்க வேண்டாம்)

நேரடித் தொடர்புகளுக்கு

075 772 0604 என்ற இலக்கத்தைப் பாவிக்க வேண்டும்.

(வார நாட்களில் மட்டும் பி.ப 2.00 மணிக்கும் 05.00 மணிக்கும் இடையில் அழைக்கலாம்)

(CR 42031) S-1

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 54022) S-1

077 810 6857 077 154 2067
021 226 5551 075 563 1451


## அமெரிக்காவும் இலங்கையும் அணுப்பாதுகாப்பு உடன்படிக்கை

கொழும்பு, மார்ச் 3

அமெரிக்கக் கடற்படையும் இலங்கைக் கடற்படையும் அணுப்பாதுகாப்புத் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அணுக்கதிர்வீச்சை ஏற்படுத்தக்கூடிய மூலப்பொருள்களைக் கடத்துவதை இரு நாடுகளும் கூட்டு நடவடிக்கையின் மூலம் தடுத்து நிறுத்தலாம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## பொங்கல் விழா

யாழ்., மார்ச் 3

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் விழா எதிர்வரும் 18ஆம், 25 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 1 ஆம், 8 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு உஷாக்காலப் பூசையுடன் ஆரம்பமாகி இரவு 9 மணிக்கு அர்த்த சாமப் பூசையுடன் பொங்கல் வழிபாடுகள் நிறைவடையுமென ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ப-66)


## மரண அறிவித்தல்



தோற்றம்
10.07.1932

மறைவு:
01.03.2024

### மயில்வாகனம் காமாட்சி

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தினைப் பிறப்பிடமாகவும், இல 142, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் காமாட்சி நேற்று முன்தினம் (01.03.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு, திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி, செல்லம்மா மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, சித்திராதேவி, பாலச்சந்திரன் (சந்திரன் - உரிமையாளர் சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை) மற்றும், விவேகானந்தன் (லிபியா - ஆனந்தன்), இராசேந்திரன், புவனேஸ்வரி (வசந்தி), பிறேமலதா (வாணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் கணேஸ், சுலோசனா காலஞ்சென்ற அனுசியா மற்றும் தையல்நாயகி, சத்தியவண்ணன், காலஞ்சென்ற நாகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ரவீந்திரன், சத்தியபாமா, முகுந்தன், அமுதா, காலஞ்சென்ற சுபிதா மற்றும் பிருந்தா காலஞ்சென்ற வனிதா மற்றும் வதனி, கார்த்திகா, கீர்த்திகா, பிரியங்கா, ஜீத்தா, நிதர்சன், பிரசன்னா, பிரசாந்தி, பிரசாந்தன், மதன்லால், ராம்லால், மதுமதி, பானுமதி, தர்சிகா, சிந்துஜன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மற்றும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும், கொப்பாட்டபிள்ளைகளின் கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 142, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல 142, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

077 979 7490, 077 267 2664

(CS/54206) J-1

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு : 06.03.2011

### அமரர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம்

(ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி, பிரதேச செயலகம் - உடுவில்)

எமது அருமை அப்பா!
அன்பையும், பண்பையும், பாசத்தையும்
எம்முள் விதைத்து
வழிகாட்டியாய் வாழ்ந்தீர்கள் - எம்
உயர்விற்காய் அயராது உழைத்தீர்கள்
உங்களைப் பிரிந்த சோகத்தை
நெஞ்சில் சுமக்கிறேன் நான்
பாச உறவுகள் பரிதவித்து வாடுகிறோம்....
உங்கள் நினைவுகளோடு காலமெலாம்
கலங்கி நிற்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வீடு, காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை - தெல்லிப்பளை வீதியில் யாழ்ப்பாணக் கல்லூரி, அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றுக்கு அண்மையில் வீட்டுடன் கூடிய 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 943 4738
011 273 2175


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயல் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, உருத்திரபுரம் றோட்டில் அமைந்துள்ள ஆலடி சித்திவிநாயகர் கோவிலுக்கு முன்பாக எட்டாம் வாய்க்காலில் உள்ள இரண்டு போகம் செய்யும் 7 ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு.

whatapp
**+614 502 63213**

(CS 54208) A-1

## வீடு வாடகைக்கு

- பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி - சம்பத் வங்கி அருகில்.
- அலுவலகங்கள், நிறுவனங்கள், வங்கிகள் நடத்துவதற்கு ஏற்றது.
- 02 ஹோல்கள், 04 அறைகள், சமையலறை, நவீன வசதிகளுடன் கூடிய உள்ளக, வெளியக குளியலறைகள் (1680 சதுர அடி)
- வாகனத் தரிப்பிடம் - 560 சதுர அடி

தொடர்பு: **070 575 6560**
**077 6086 209**

(CS 54218) A-1


# ஞானாலயம் மாணவர்கள் யோகாசனத்தில் தங்கம்



கொழும்பு, மார்ச் 3

கொழும்பில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச யோகாசனப் போட்டியில் பங்குபற்றிய பருத்தித்துறை ஞானாலயம் யோகா மாணவர்கள் தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

கொழும்பில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில், யோகா குரு ம. இரத்தினசோதியின் மாணவர்களான திருமதி முரளி மாலதி, முகுந்தன், கா.சிறீராம் ஆகியோரே தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளனர். (ப-100)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 29.07.1947 மறைவு 02.02.2024

**அமரர் வீரசிங்கம் தவரட்ணம்**
(ஓய்வுநிலை தொழில்நுட்ப அலுவலர் பெருந்தெருக்கள் திணைக்களம்)

கடந்த 02.02.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியை அறிந்து நேரில் சமுகம் தந்தவர்களுக்கும் வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் முகநூல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், மலர்வளையங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளிலும், தகனக் கிரியைகளிலும் பங்குபற்றிய உற்றார் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்றுவரை பல வழிகளிலும் சரீர உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கும் அத்தனை உள்ளங்களுக்கும் அன்போடு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"கமலபவனம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR 42034) V-1

## வீடு வாடகைக்கு

உடுவில் கிழக்கு சுன்னாகம் மானிப்பாய் வீதி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
(அலுவலகங்களுக்கு விரும்பத்தக்கது).

தொடர்பு: **076 984 3572**

## ஜீனியஸ் இன்ஸ்ரிரியூட்

G.C.E (O/L) 2024 ஆங்கிலப் பாடம் 10 வருட கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் 2025 G.C.E (O/L) ஆங்கிலம், கணிதம், வணிகக்கல்வியும் கணக்கீடும், விஞ்ஞானம் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு: **076 387 1033**
**071 310 6279**

184-A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

HR - இலக்கமுடைய 2000 ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மிகவும் நல்ல நிலையில் உள்ள **CD 125 BENLY** மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **076 980 7634**
**077 749 5956**


# இ.போ.ச. பஸ் விபத்து மாணவர்கள் காயம்!

சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இ. போ. ச. பஸ்விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் காயமடைந்துள்ளனர். கொடையான பகுதியிலேயே நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் விபத்து நடந்துள்ளது. வேகமாகப் பயணித்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட மொத்தம் 36 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)


## கல்வி

**6-11 வரை விஞ்ஞானம், கணிதம்** பாடங்கள் பட்டதாரி ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து **தமிழ் / ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும்.**

(CS/54183) J-1

தொடர்பு:- **077 639 1935**

ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை நிர்வாகத் தெரிவும் விசேட பொதுக் கூட்ட அழைப்பும்

காலம் - 16.03.2024 சனிக்கிழமை
நேரம் : மதியம் 12.00 மணிமுதல் 1.00 மணிவரை
இடம் : ஆதிமயிலிட்டி அருள்மிகுபெரும் பரப்பு பிள்ளையார் ஆலயம்.
அனைவரையும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
பரிபாலன சபை
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.

## மரண அறிவித்தல்



**சிவநாவலன் பரணிதன்**

விசுவமடுவைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவநாவலன் பரணிதன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (01.03.2024) அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் சிவநாவலன் (அதிபர் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), சந்திரவதனா (ஆசிரியர் - யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை) தம்பதியினரின் அன்பு மகனும், பிரணவி, யாதவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவப்பிரகாசம்-காலஞ் சென்ற நாகேஸ்வரி, செல்லையா - பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (05.03.2024) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
**077 157 7712, 077 640 6374**

(CR42032) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 12 . 1970



இறப்பு 01 . 03 . 2024

**பரஞ்சோதி சாம்பசிவதாசன் (சிவம்)**
பொங்குதமிழ் அழகு சாதன வாணிபம், சந்தை உட்புறம், கிளிநொச்சி:, "ஆ" உற்பத்தி உரிமையாளர், கூத்தாதோட்டம், வதிரி, கரவெட்டி.

கூத்தாதோட்டம், வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த பரஞ்சோதி சாம்பசிவதாசன் (சிவம்) அவர்கள் கடந்த (01.03.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான பரஞ்சோதி - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், மாலினி அவர்களின் அன்புக் கணவரும், அமரர் சுப்பிரமணியம் - வேதநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், அரண்யா, ஆத்திகன், இளவெயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் கண்ணதாசன், விக்கினதாசன் (அவுஸ்திரேலியா), தணிகைதாசன் (உதயநகர் கிளிநொச்சி), அமரர் இராமதாசன் (அன்பழகன் மாஸ்ரர் / சிறி), வல்லிபுரதாசன் (விசுவமடு) ஆகியோரின் சகோதரரும், திருஞானச்செல்வன் (ஜேர்மனி) அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும், பரம் தில்லைராஜன் (ஆசிரியர், யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி), சாந்தினி, சுடாட்சரன், அமரர் ஜெயராணி (ஆசிரியர், உருத்திரபுரம்), நிர்மலாதேவி (அவுஸ்திரேலியா), உதிஸ்ரா, குணதயாளினி (ஆசிரியர், கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூத்தாதோட்டம்,
வதிரி,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.
தரணி - 077 325 8052,
ரகு - 077 589 4167


(CR 42035) A-1


# மெய்வன்மை போட்டி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி, கல்லூரி மைதானத்தில் நாளை திங்கட்கிழமை பி.ப 1 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதி யாக யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி விரிவுரையாளர் எம். இளம்பிறையன் கலந்து கொள்ளவுள்ளார். (ப-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜம் நிழலாகி ஓராண்டு



தோற்றம் 04 • 04 • 1959

மறைவு 15 • 03 • 2023

## அமரர் வேலாயுதம் கருணாகரன்

**(ஓய்வு பெற்ற பொருளியல் ஆசிரியர்)**

*திதி: மாசி மாத அபரபக்க அட்டமி*


ஆண்டொன்று ஆனதோ அகல் விளக்கு அணைந்திங்கு
ஓடியதே வருடமொன்று நீவீர் ஓய்வெடுக்க தொடங்கி அங்கு
அன்பின் ஆதாரமாய் இரக்கத்தின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் வாழ்ந்தீரே
கல்விக்காய் உமை வழங்கி கண்ணியமாய் வாழ்ந்தீரே
கண்ணுக்கு இமையாய் சிப்பிக்குள் முத்தாய்
காத்தீர் எமையெல்லாம்.
கண் முன்னே வாழ்ந்த நாட்கள் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உம் நினைவு உயிர் வாழும் எந்நாளும்.
நின் ஆத்மா சாயி பாபாவின் பாதக்கமலங்களில்
சரணடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

**215, நாவலர் வீதி**
**யாழ்ப்பாணம்.**

என்றும் நினைவுகளுடன்
**மனைவி, மக்கள்,**
**மருமகன், பேரன்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 • 06 • 1930

மறைவு 26 • 02 • 2024

## டாக்டர் நாகலிங்கம் கந்தையா

**வயது 93**

**(முன்னாள் வைத்திய அதிகாரி, இலங்கை)**

யாழ்ப்பாணம் அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடா - ஸ்காபரோ ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட டாக்டர் நாகலிங்கம் கந்தையா அவர்கள் 26.02.2024 திங்கட்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் அராலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், அராலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தப்பு - செல்வம் தம்பதியரின் மருமகனும், நாகரத்தினம் (தங்கம்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், மதிவதனி (இலங்கை), சந்திரவதனி (கனடா), ரவீந்திரன் (USA), குலேந்திரன் (கனடா), ரூபவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரசிவம், ஜெயக்குமார், கலைமதி (கலா), விஜயா கலாரஞ்சிதன் (ஜெயா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந்தினி - ஆதவன், நிரு[illegible] - ஜனகா, தனயன், சஞ்சயன், தேசாங்கன், குமரன், மயூரன், தாரணி ஆகியோரின் பாசமிகு பேரனும், அர்ச்சனாவின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், குமாரசாமி, நடராசா ஆகியோரின் மைத்துனரும், தர்மராசாவின் தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (04.03.2024) கனேடியன் நேரம் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, 1.00 மணிக்கு "Forest Lawn Crematorium Centre" 4570 Yonge St, Toronto, ON Canada. இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**416 385 2788**
**மதிவதனி - மகள் - 94-77 369 7058**

(CS 27819) V-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 05.10.1942

இறப்பு 27.02.2024

## அந்தோனிப்பிள்ளை மரியநேசன்

**(பொன்ராசா)**

(பண்டத்தரிப்பு St.Anthony's Hardware - உரிமையாளர்)

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடா (Scarborough) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியநேசன் (பொன்ராசா) கடந்த 27.02.2024 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லெனார்ட் அந்தோனிப் பிள்ளை - பிரான்சிஸ்க்கா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், அக்னஸ் ஞானவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை சின்னப்பர் - அழகரோஸ் தம்பதியரின் அன்பு மருமகனும், கிரேஷியன், கிறிஸ்ரின் (Thanga), ஜசிந்தா (Chooty), திரேசா (Jency), அன்ரோனியா (Tany), அன்ரன் (Anto), பற்றிமா (Shiyama) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜி, மனோஜ், ஸ்மித், லைவலின், பிரதீப், றொஷாந்தி, அஞ்சலோ ஆகியோரின் அன்பு மாமனாரும், அஷ்வின், கொட்வின், கத்தரின், திமோத்தி, நந்தானியா, அன்ரனி, இதழ்யா, ஃபேபியன், றெஷிக்கா, றெஷிக்கியல் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற வர்களான மனுவேல்பிள்ளை (பப்பா), ஜேசுதாசன் (master) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிபலகைப் பயணம் தடுத்து நிறுத்துங்கள்

## பயணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3

**மிதிபலகைகளில் நின்றவாறு தொடர்ந்தும் பலர் பயணித்து வருகின்றனர். ஆபத்தான இந்தப் பயணங்களுக்கு வழிவகுக்கும் பேருந்துகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் பஸ்ஸின் மிதிபலகையில் இருந்து தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ள நிலையிலும், பஸ்ஸின் மிதிபலகையில் தொங்கியவாறு ஆபத்தான பயணங்களை இன்னமும் தொடர்கின்றனர்.

பேருந்துகளில் அதிகளவில் பயணிகள் ஏற்றப்படுவதே இதற்குக் காரணமாகும். இவ்வாறான உயிர்காவு பயணங்களைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர்.

(ச-17)

**MILO Football Champs 2024**

**மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 - வட மாகாணம்**

மைலோ உதைப்பபந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 (MILO Football Champs 2024) - வட மாகாணம் (10 வயதுக்குட்பட்ட மற்றும் 12 வயதுக்குட்பட்ட) போட்டிகளின் முதல் கட்டம் 2024 பெப்ரவரி 24 அன்று மன்னார் மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் 16 பெண்கள் அணிகள் மற்றும் 48 ஆண்கள் அணிகள் என மொத்தம் 64 அணிகள் பங்கேற்றன.

இந்த வார இறுதியில் வெற்றிபெற்ற மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வெற்றி பெற்ற அணிகளில் பின்வரும் பாடசாலைகள் இடம்பெற்றன:

* மன்னார் அடம்பன் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (10 வயதுக்குட்பட்ட பெண்கள்)
* மன்னார் இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயம் (12 வயதுக்குட்பட்ட பெண்கள்)
* மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை (ஆண்கள் - 10 வயதுக்குட்பட்டோர்)
* மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை (12 வயதுக்குட்பட்ட ஆண்கள்)

இந்த வார இறுதி நிகழ்விலிருந்து. 2024 மார்ச் 23 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இறுதிச் சுற்றில் பின்வரும் பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகள் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளன.

**10 வயதுக்குட்பட்ட பெண்கள்**

* மன்னார் அடம்பன் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
* மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை
* மன்னார் புனித லூசியா மகா வித்தியாலயம்
* மன்னார் தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம்

**10 வயதுக்குட்பட்ட ஆண்கள்**

* மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை
* மன்னார் இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயம்
* மன்னார் அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
* மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி

**12 வயதுக்குட்பட்ட பெண்கள்**

* மன்னார் இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயம்
* மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
* மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை
* மன்னார் கருங்கண்டல் ரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம்

**12 வயதுக்குட்பட்ட ஆண்கள்**

* மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை
* மன்னார் தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம்
* மன்னார் புனித லூசியா மகா வித்தியாலயம்
* மன்னார் புனித அன்னம்மாள் கல்லூரி

எதிர்கால உதைப்பந்தாட்ட நட்சத்திரங்களின் திறனை வெளிக்கொணரும் வகையில், மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் நிகழ்வானது வட மாகாணத்தில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களின் விளையாட்டு திறன்களை தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்போட்டித் தொடருடன் இணைந்ததாக, இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுபவமிக்க பயிற்சியாளர்களால் வழிநடத்தப்படும் திறமையான தனிநபர்களின் தெரிவு செய்யப்பட்ட குழுவினர் எதிர்வரும் மாதங்களில் வார இறுதி நாட்களில் விசேட பயிற்சிகளைப் பெறுவார்கள். கல்வி அமைச்சு, வடமா காணக் கல்வித் திணைக்களம் மற்றும் நெஸ்லே மைலோவின் அனுசரணையுடன் இலங்கைப் பாடசாலைகள் உதைப்பந்தாட்டச் சங்கம் இந்த நிகழ்வின் ஏற்பாடுகளை நிர்வகிக்கும்.

இலங்கையில் அடிமட்ட விளையாட்டுகளை வளர்ப்பதற்கும், விளையாட்டுகளில் பாலின பன்மைத்துவத்தை மேம்படுத்துவதற்குமான தனது பயணத்தில், இலங்கையின் எதிர்கால சந்ததியினரை வளப்படுத்தும் நோக்குடன் இந்த நிகழ்வுக்கு நெஸ்லே மைலோ அனுசரணை அளிக்கிறது.

# அரசியல் மேடைகளில் பிக்குகள் வேண்டாம்!

## மேர்வின் சில்வா கோரிக்கை

எமது அரசியல் மேடைகளில் பௌத்த பிக்குகளை ஏற்றப்போவதில்லை. ஏனைய கட்சிகளின் மேடைகளிலும் பிக்குகள் ஏற வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வாவின் பங்களிப்புடன் விரைவில் அரசியல் இயக்கமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.

இந்தநிலையில், சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் தொலைக்காட்சியொன்றில் இடம்பெற்ற நேர்காணலின்போதே மேர்வின் சில்வா இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நாட்டு மக்கள் அனைவரும் சமத்துவமாக வாழவேண்டும் என்பது எனது ஒரே நோக்கம். அனைத்து இன, மத மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

எமது மேடைகளுக்கு வணக்கத்துக்குரிய மகாசங்கத்தினரை அழைக்கப்போவதில்லை. அவர்கள் தர்மத்தை, ஒழுக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல ஆலோசனை வழங்கட்டும். அரசியல் மேடை எதிலும் ஏறக்கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

(எ-44)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

**பத்தாம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம் 17 . 04 . 1925



மறைவு 22 . 02 . 2014

**முருகேசு ஆறுமுகம்**

(சிறீ சுப்பிரமணியர் அரிசி ஆலை - உரிமையாளர்)

SAS பாராஊர்தி - உரிமையாளர்

பிள்ளைகள் வாழ்வுக்கு அடித்தளம் அமைத்தீர்
உறவினர் அன்பிலே மூழ்கிக் களித்தீர்
ஊருக்கு நல்லதோர் வழிகாட்டி நின்றீர்
பேரர்கள் தம்மோடு மழலை மொழிந்தீர்
வயதான போதிலும் சுகமாய் இருந்தீர்
காலனின் வரவிலே அமைதி அடைந்தீர்
காலங்கள் கடந்தாலும் மறவாமல் உம்மை
மனதிலே இருத்தி வழிபாடு செய்கிறோம்....

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

மாகியப்பிட்டி
சண்டிலிப்பாய்.

021 224 1982

# பொதுமக்கள் சந்திப்பு



சாவகச்சேரி, மார்ச் 3

சாவகச்சேரி பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில், பொது மக்களின் தேவைகளைக் கண்டறிவதற்கான பொதுமக்கள் சந்திப்பு சரசாலை வடக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ. ஸ்ரீவர்ணன், சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் க. சந்திரகுமார், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அலுவலர்கள், சனசமூக நிலைய உத்தியோகத்தர், கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி இணைப்பாளர் திருமதி இராஜலட்சுமி, பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆண் வேலையாட்கள் தேவை

பலசரக்குக் கடைக்கு அனுபவமுள்ள
ஆண் வேலையாட்கள் தேவை.
உடுவில், மானிப்பாய் பிரதேசங்களைச்
சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.

**074 363 1559, 076 888 1857**

## பகுதிநேர வேலையாள்கள் தேவை



வெல்டர் மற்றும் தச்சுத் தொழில் ஆகியனவற்றுக்கு பகுதி நேரப் பணியாளர்கள் தேவை.
விரும்பினால் இரவிலும் பணியாற்றலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 120 9998**

# எரிபொருள், எரிவாயு விலை இந்த மாதம் மாற்றமில்லை

கொழும்பு, மார்ச் 3
தற்போதுள்ள எரிபொருள் விலையை திருத்தம் இன்றி மார்ச் மாதத்தில் தக்கவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மாதாந்த எரிபொருள் விலைத்திருத்தத்தின்பிரகாரம், கடந்தவியாழக்கிழமை நள்ளிரவு முதல் எரிபொருள் விலைத் திருத்தம் செய்யப்படவேண்டும்.

ஆயினும் தற்போதுள்ள விலைக்கே எரிபொருள் விற்பனையை மேற்கொள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள் ளது.

அதேவேளை லிட்ரோ சமையல் எரிவாயு விலையிலும் இம்மாதம் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். (ச-இ)

# நாமல் வேட்பாளரா? முடிவெதுவும் இல்லை

## மொட்டுக் கட்சி தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் கட்சி இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று பொதுஜன பெரமுனவின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது குறித்து கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. அதேபோல நாமல் ராஜபக்சவை வேட்பாளராகப் போட்டியிட வைப்பது பற்றியும் தீர்மானம் எடுக்கப்பட வில்லை. எனினும், நாமல் ராஜபக்சவின் பங்களிப்புடன் கட்சியைக் கட்டியெழுப்பும் பணி இடம்பெறுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி மட்டத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றுவருகின்றது. எனவே, உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்.

அதேவேளை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ-44)

## இந்தியத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 23ஆம் திகதி வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுச் சபைக் கூட்டமானது முல்லைத்தீவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எட்டப்பட்டது. அன்றையதினம் கச்சேரியிலிருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் வரை நடைபெறும் - என்றார். (அ-ஒ-27)

## மோ.சைக்கிள்...

செம்மலையைச் சேர்ந்த நாகரத்தினம் யோகராசா (வயது -56) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அளம்பிலிலிருந்து குமுழமுனை நோக்கி மோட்டார் சைக்கிளில் அவர் பயணித்துக்கொண்டிருந்தபோது எதிர்த் திசையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மத்திய கோட்டைத் தாண்டி வலதுபக்கமாகச் சென்று அவரை மோதித்தள்ளியுள்ளனர். படுகாயமடைந்த யோகராசா மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## கேள்வி அறிவித்தல்
## பிரதம செயலாளர் செயலகம் - வட மாகாணம்.
## பாவனையிலிருந்த வாகனங்களின் விற்பனை

1) பிரதம செயலாளர் - வடக்கு மாகாணம் அவர்களால் வட மாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களின் பாவனையிலிருந்த பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல | வாகன இல | வகை / உற்பத்தி | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|---|
| DV/2024/01 | NP RB 3416 | Farmtrac FT60 - உழவு இயந்திரம் | 20,000.00 |
| DV/2024/02 | NP RB 4675 | Tafe - 4SD1- உழவு இயந்திரம் | 20,000.00 |
| DV/2024/03 | 37 SRI 4901 | FORD - உழவு இயந்திரம் | 20,000.00 |
| DV/2024/04 | 200 - 0303 | BAJAJ - முச்சக்கர வண்டி | 6,000.00 |
| DV/2024/05 | 149-1403 | HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/06 | NP TJ 6653 | TVS - SCOOTY PEP - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/07 | NP XZ 3110 | MINNELLI - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/08 | NP HE 8645 | HERO HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/09 | NP XZ 3104 | MINNELLI - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/10 | NP HE 8648 | HERO HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/11 | 135-6193 | HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/12 | NP JR 4921 | Hero Honda - CD100SS - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/13 | NP JE 6934 | TVS Fiero F7- மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/14 | NP HR 3144 | DELUXE - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/15 | NP HH 1031 | HERO HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/16 | NP VH 5351 | BAJAJ - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/17 | NPMI 7483 | Hero HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/18 | NP HR 3179 | DELUXE - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/19 | NP WN 4528 | TVS STAR - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்கள் | | | |
| DV/2024/20 | ISUZU - Motor Lorry | | 10,000.00 |
| DV/2024/21 | TAFE 45DI - உழவு இயந்திரம் | | 10,000.00 |
| DV/2024/22 | EMEI - கை உழவு இயந்திரம் | | 6,000.00 |
| DV/2024/23 | SRI TRAK - Land Vehicle Bowser | | 4,000.00 |
| DV/2024/24 | WIMAL - உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |
| DV/2024/25 | WIMAL - உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |
| DV/2024/26 | TECHNIP - உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |
| DV/2024/27 | உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |

2) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ருபா 500/= இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 04.03.2024ம் திகதி தொடக்கம் 25.03.2024 ம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரையான காலப்பகுதியில் **பிரதிப்பிரதம செயலாளர்- நிதி, பிரதிப்பிரதம செயலாளர்-நிதி அலுவலகம், வட மாகாணம், மாகாணசபை வளாகம், A 9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

3) கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 04.03.2024 ம் திகதி தொடக்கம 25.03.2024 திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை **நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் அமைந்துள்ள வடமாகாண சபையின் தற்காலிக வாகனத் தரிப்பிடத்திலும், DV/2024/20 ISUZU - Motor Lorry** பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனத்தினை **சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம் பண்ணையில்** பார்வையிடலாம்.

4) ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களிற்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5) கேள்விதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்விப் பிணைப் பணத்தினை ( **Bid Security**) வைப்பாக **பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, பிரதிப் பிரதம செயலாளர்-நிதி அலுவலகம், வட மாகாணம், மாகாணசபை வளாகம், A 9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில்** பணமாக செலுத்துதல் வேண்டும்.

6) கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'கேள்விப் பத்திர மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் - வாகன இல ......'** எனக் குறிப்பிட்டு 26.03.2024 ம் திகதி மு.ப 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழு, பிரதம செயலாளர் செயலகம், வடமாகாணம், மாகாணசபை வளாகம், A 9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதம செயலாளர் செயலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

7) கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**எஸ்.எம். சமன் பந்துலசேன,**
**தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு,**
**பிரதம செயலாளர் செயலகம்,**
**மாகாணசபை வளாகம்,**
**A 9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**
**01.03.2024**

(CR 42029) A-1

## மரண அறிவித்தல்

## தெய்வநாதன் செல்வராணி

**(ஓய்வு பெற்ற மருத்துவ பரிசாரகர்-யாழ் போதனா வைத்தியசாலை)**



**பிறப்பு 27.03.1956**
**இறப்பு 29.02.2024**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வநாதன் செல்வராணி அவர்கள் கடந்த (29.02.2024) வியாழக்கிழமை இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை -மீனாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னையா -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், தெய்வநாதன் அவர்களின் அன்பு மனைவியும், றொஷானி, அபிராமி, அபிராஜ் அவர்களின் பாசமிகு தாயாரும், குலோஜனன், துயந்தன் அவர்களின் அன்பு மாமியாரும், அஹானா, ஆதிரா, பிரதிக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தயாரும், பாக்கியம் (அமரர்) நவரட்ணம் (அமரர்) சந்திரசேகரன் (அமரர்) கமலாம்பிகை, புஷ்பராணி, ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இரத்தினவதி, சரோஜினிதேவி, மல்லிகாதேவி, ரவீந்திரன், சந்திரபோஸ், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (04.03.2024) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/13, நடுத்தெரு வீதி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 9269 614**
**077 399 7960**

(CS 27615) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன் இது தொடர்பில் விடுத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில்,

இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசிய துக்கதினமாகக் கடைப்பிடிக்க பொது அமைப்புகள் நேற்றுக்கூடி முடிவெடுத்துள்ளன. இன்றையதினம் களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்த்து அமரர் சாந்தனுக்கு அனைவரும் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தவேண்டும்.

தமிழகத்தில் நோய்வாய்ப்பட்டு உயிர் துறந்த அரசியல் கைதி தில்லையம்பலம் சுதேந்திரராஜா (சாந்தன்) திருவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் அஞ்சலி செலுத்த ஏதுவாக அவரது தாய் மண்ணுக்கு எடுத்துவரப்படவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் சாந்தனின் உடல், தொடர்ந்து மாங்குளம் பகுதிக்கு காலை 9 மணிக்கு எடுத்துவரப்படவுள்ளது. தொடர்ந்து மு.ப. 10.30 மணிக்கு கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் மக்கள் அஞ்சலியின் பின்னராக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் கொடிகாமம் - நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்கு எடுத்துவரப்பட்டு வல்வெட்டித்துறை, தீருவிலில் பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது. மாலை அவரது வீட்டுக்கு எடுத்துச்செல்லப்படும் திருவுடல் நாளை திங்கட்கிழமை அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னெடுக்கப்பவுள்ள அஞ்சலி நிகழ்வுகளில் வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் அணி திரண்டு அஞ்சலி செலுத்தவேண்டும். அனைத்து இடங்களிலும் நீதி கோரியும் துக்கதினத்தை நினைவு கூரும் வகையில் கறுப்புக் கொடிகளைத் தொங்கவிடவும் - என்றுள்ளது.

இறுதி நினைவஞ்சலி நடத்தப்படவுள்ள வல்வெட்டித்துறை, தீருவிலில் அனைவரையும்திரண்டுவர அழைப்புவிடுத்துள்ள பொது அமைப்புகள் இறுதிக்கிரியைகள் நடைபெறும் நாளை திங்கட்கிழமை, குடும்பத்தவர்கள் மற்றும் ஊர்மக்கள் அஞ்சலி செலுத்தவும் ஒத்துழைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் சாந்தனின் திருவுடல் வைக்கப்படும் இதே தீருவில் வெளியில் தான் இந்திய அரசின் சதியால் களப்பலியான குமரப்பா-புலேந்திரன்உள்ளிட்ட பன்னிரு போராளிகளின் வித்துடல்கள் தகனம் செய்யப்பட்டிருந்ததுடன், கேணல் கிட்டு உள்ளிட்ட போராளிகளின் இறுதி நிகழ்வுகளும்நடைபெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26-100-66)

## வடக்கு...

சம்மேளனத்தின் தலைவர் புனிதபிரகாஸ் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, வலி.தென்மேற்கு, வலி. வடக்கு, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, வேலணை ஆகிய சமாசங்களின் கீழ் செயற்படும் சங்கங்கள் இன்றையதினம் போராட்டத்தில் பங்கேற்கவுள்ளன.

இந்தச் சங்கங்களின் கீழ் உள்ள தொழிலாளர்கள் 4 ஆயிரத்து 500 பேர் ஆயிரம் படகுகளுடன் மு.ப. 10 மணிக்கு போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் சுண்டிக்குளம், வடமராட்சியில் பருத்தித்துறை, வலி. தென்மேற்கில் மாதகல் ஆகிய இடங்களிலிருந்து தலா 50 படகுகள் மாத்திரம் இந்திய எல்லையை நோக்கிச் சென்று அங்கு போராட்டத்தை நடத்தவுள்ளன. ஏனைய படகுகள்கரையிலிருந்து கடலில்10 கிலோமீற்றர் தூரம் சென்று 2 மணி நேரம் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளன.

(அ-ஒ-125-66-100)

## எந்தத்...

முடிகின்றது. நாளைமறுதினம் மொட்டுக் கட்சியின் நிறுவுநரான பஸில் ராஜபக்ச நாடுதிரும்புகின்றார். அவரை பிரமாண்டமாக வரவேற்பதற்கு மொட்டுக் கட்சியினர் தயாராகி வருகின்றனர். பஸில் நாடு திரும்பிய கையோடு மொட்டுக் கட்சியினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

மொட்டு - யானை கூட்டணியின் ஆயுள், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பன உள்ளிட்ட முக்கியமான விடயங்களைத் தீர்மானிக்கும் கூட்டமாக இது அமையவுள்ளது.

பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களை ரணில் விக்கிரமசிங்க வளைத்துப் போட்டுள்ளதால் பஸிலின் தரப்பு அதிருப்தியில் உள்ளது. சிலவேளை இந்தச் சந்திப்பின் பின்னர் மொட்டுக் கட்சியின் ஒரு தரப்பு எதிரணியில் அமர்வதற்கான சாத்தியமும் இருப்பதாகக்கூறப்படுகின்றது.

(அ-ஒ-44)

## பொன்...

அளவில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வென்ற புனித பத்திரிசியார் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணி சார்பில் ஜோன்சன் 63 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். புனித பத்திரிசியார் கல்லூரி சார்பில் பந்துவீச்சில் செகான், அபிலாஷ் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணி சார்பில் மதுசன் 39 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் விஷ்ணுகோபன் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு இரண்டாம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 7 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணி சார்பில் விஷ்ணுகோபன் 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் சாருசன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு இரண்டாம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி 13 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனடிப்படையில் 107ஆவது பொன் அணிகளின் போர் துடுப்பாட்டப் போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது.


போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஜோன்சன், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் விஷ்ணுகோபன், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஜோன்சன், சிறந்த சகலதுறை வீரராக புனித பத்திரிசியார் கல்லூரி வீரர் சாருஜன், போட்டியின் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் விஷ்ணுகோபன் ஆகியோர் தெரிவானார்கள்.

(அ-ஒ-125)

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
குறைந்த கட்டணம் நம்பிக்கையான சேவை
ANNA EXPRESS
077 122 1566
070 330 5500
077 923 5823

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1957



மறைவு 01 . 03 . 2024

## தம்பிராஜா ஸ்ரீஸ்கந்தராஜா

**(Built, Element Ltd Ratmalane), (Ramakrishnan Meshion Guest House Manager, Wellawatta)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு மற்றும் கொழும்பு சொயிசாபுரத்தை வதிவிடங்களாகவும் கொண்ட தம்பிராஜா ஸ்ரீஸ்கந்தராஜா (Built, Element Ltd Ratmalane), Ramakrishnan Meshion Guest House Manager, Wellawatta) நேற்று முன்தினம் (01.03.2024) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா- புனிதவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - சாரதாமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், கணாதீபன் (Built Element Ltd Ratmalane), கணாபிராமி (Tally Tally Accounting an.uk) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமிர்த கௌரி, ஞானரூபம், புவனேஸ்வரி, செல்வகுமார் (சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான அழகானந்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நித்தியானந்தம் மற்றும் பரமேஸ்வரன், நந்தினி, முருகானந்தன் (இத்தாலி), தயானந்தன் (வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்), சண்முகாநந்தன் (வட்டக்கச்சி), கருணானந்தன் (Built Element Ltd Ratmalane), குகானந்தன் (Rocell), குகனேஸ்வரி (கன்டா) ஆகியோரின் மைத்துனரும், சசிகலா (இத்தாலி), அருளேஸ்வரி, தமிழரசி (இல்மா முஸ்லிம் மகா வித்தியாலயம்), ஜெயபானு (சித்த மருத்துவம்), யோகராஜா (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் கிழக்கு,**
**சிவகாமி அம்மன் கோவிலடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகன் - 077 875 6174**
**077 721 4234**

(CS 54520) A-1

தேவை
(1615) TATA ரிப்பர் தேவை
விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.
T.P: 077 635 9488

வீடு வாடகைக்கு உண்டு
நல்லூர் கோவிலில் இருந்து 400 m தூரத்தில் கோவில் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
மாத வாடகை 30.000/-
முற்பணம் :300.000/-
தொடர்பு: 077 3068 993

வாகனம் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள TATA-207 DI
எனும் வாகனம் விற்பனைக்கு உண்டு.
உற்பத்தி வருடம் 2011
விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 075 042 7547

பணிப்பெண் தேவை
மல்லாகம் பகுதியில் சிறிய குடும்பம்
ஒன்றிற்கு தங்கி நின்று
வேலை செய்யக்கூடிய
வீட்டுப்பணிப் பெண் தேவை.
(உணவு தங்குமிடம் இலவசம்)
(CS/54219) J-1
077 170 0145, 077 158 2384

வீடு வாடகைக்குத் தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் இருவர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:077 635 4224

காணிகள் விற்பனைக்கு
நீர்வேலி. கல்வியங்காடு. உடுவில்.
மருதனார்மடம். நயினாதீவு. பூநகரி
கடற்கரைப் பகுதிகளில் காணிகள்
மற்றும் வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 050 3863
075 873 8238

Win Repair
உங்களது குளிர்சாதனப்பெட்டிகள். சலவை இயந்திரங்கள், AC களும் பழுதடைந்து விட்டனவா? கவலையை விடுங்கள்.
உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்.
(cs.54216) (N-1)
தொடர்பு: 076 906 4682

வேலையாட்கள் தேவை
யாழ்நகரில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு சமையலாளர் மற்றும் கொத்து, Rice போடக்கூடியவர்கள் உடனடியாக தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(cs.54214) (N-1)
077 755 5456

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MATHEMATICS

**Grade 6-11** **English Medium**

**Online Classes** zoom

**Conducted By:** Leading National School Teacher In Colombo.

FOR FURTHER DETAILS CONTACT THROUGH

**WHATSAPP 0750707794**

Note: Classes will be conducted only in English medium

(CR 42028) V-1

## காணி விற்பனைக்கு

புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

2 பரப்பு - 5 லட்சம். கையிருப்பில் 20 காணித்துண்டுகள் மாத்திரம் உள்ளன.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

(CS 28061) V-1

## வாடகைக்கு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் மேல் வீடு வாடகைக்கு விடப்படும்.

070 182 0630

(cs.54207) (N-1)

## விற்பனைக்கு, வாடகைக்கு

வீட்டுத்தளபாடங்கள், மோட்டார்சைக்கிள், தையல் இயந்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு.
வீடு வாடகைக்குண்டு.

076 271 2353, 077 9384809

(cs.54217) (N-1)

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர்ப்பகுதிக்கு அண்மையில் வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)

தொடர்பு:- 077 710 9016

(CS/54200) J-1

## மணமகள் தேவை

1980, யாழ் இந்து (V) UK Nationality உடைய திருமணமாகாத நற்பண்புள்ள மணமகனுக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. மணமகன் விபரம்: உதய லக்கினம். கடகம். சந்திர லக்கினம். மீனம். உத்திரட்டாதி. 2 ஆம் கால் இலங்கையில் பட்டதாரி மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. வாட்சப் இலக்கத்திற்கு புகைப்படம். குறிப்பு நேரடி தொடர்பு இலக்கத்தை அனுப்பவும்.

வாட்சப்
044 780 251 6808 (Krish -UK)

(cs.54213) (N-1)

## கணக்கு லிகிதர்கள் தேவை

யாழ்.நகரில் பொதிப் போக்குவரத்து சேவை நிலையத்திற்கு கணக்குலிகிதர்கள் தேவை.

தொடர்பு:- யோகா ரான்ஸ்போட்
இல.02 திருவள்ளுவர் சாலை
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222 9042, 077 756 0682

(CS/54179) J-1

## காணி விற்பனைக்கு

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அருகாமையில் தபால் கந்தோர் வீதியில் 200m தூரத்தில் இருபக்க பாதை வசதிகளுடன் 12 பரப்பு 16 குளி காணி விற்பனைக்கு உண்டு - தெளிவான ஆவணங்களுடன்.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்.

தொடர்பு:- 077 136 2490

(CS 54181) V-1

## ஆசிரியர் தேவை

- பாடம் :- A/L உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- இடம் :- யாழ்ப்பாணம் (நகர்ப்பகுதி)
- எதிர்பார்ப்பு :- தகுதியும் ஆர்வமும் உடைய இளம் பட்டதாரி ஆசிரியர் (B.Sc/Agri)

நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு :- ஆர்வமுடையவர்கள் 0703205828 Whatsapp இலக்கத்திற்கு தங்கள் விபரங்களையும் தொடர்பு இலக்கத்தையும் பதிவிடவும்.

தொடர்பு:- 070 320 5828

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 986 5457

உங்கள் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ள அழையுங்கள்



077 495 5606

Be treated at your home

For More Details whatsapp

(cs.54155) (N-1)


நட்பின் சிறகுகள்

இலங்கை வான் படையின் வான வேடிக்கை

73ம் வருட பூர்த்தியின் கொண்டாட்டம்

SRI LANKA AIR FORCE
GUARDIANS OF THE SKY 1951 - 2024

AIR TATTOO - 2024 - JAFFNA

மார்ச் 6,7,8,9,10 - காலை 10.00 மணி - இரவு 10.00 மணி வரை - யாழ் முற்றவெளி மைதானத்தில்

SALES - EXHIBITION
PROMOTION
FOOD
STALLS AVAILABLE
மேலும் பல விளம்பர சேவைகள்





இலங்கையில் முதல் முறையாக

இந்தக் கொடியில் உங்கள் விளம்பரம் இடம்பெற வேண்டுமா?

யாழ் பாடி
தங்குமிடம் - யாழ் உணவகம்
Yarl Pardy
Rooms - JAF TRAD RESTAURANT
51, Amman Road, Nallur, Jaffna.
021-222 68 68 | 0777 34 00 26

+94 713 092 525
+94 767 601 171
+94 759 360 370 (யாழ்)

PROMOTERS
Iron Brit International (Pvt) Ltd
55/5, Alwis Place,
Colombo 03.


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவன[illegible]த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08 Registered as a Newspaper

# சஞ்சீவி


மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2... மாசி 20 ஞாயிற்றுக்கிழமை (03.03.2024) சிகரம் : 190

கேணிகளை மூடினோம்
குளங்களை மேவினோம்
ஆணிவேர் மரங்களை
அடியோடு கிளப்பினோம்
காணி பூமி பள்ளமெலாம்
கருங்கல் மாடமடைத்தோம்
பேணிய நிலமதை நஞ்சாக்கினோம்
புண்ணியம் இனிப் பூக்குமோ?

**கே.எஸ்.சிவஞானராஜா**







# சாந்தன்:

## இரண்டு ஆயுள் தண்டனைகள் இரண்டு பிரேத பரிசோதனைகள்

நிலாந்தன்

சாந்தன் இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலைசெய்யப்பட்டவர். பொதுவாக இந்தியா - இலங்கை போன்ற நாடுகளில் ஆயுள் தண்டனை எனப்படுவது விடுமுறை நாள்களைக் கழித்துப் பார்த்தால் 15 ஆண்டுகள். சிறை, சிறப்பு முகாம் போன்ற இடங்களில் சாந்தன் தடுத்து வைக்கப்பட்டிருந்தது 33 ஆண்டுகள். அப்படிப்பார்த்தால் அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை முடித்துவிட்டார். அதற்குப் பின்னரும் அவர் தாயகம் திரும்புவதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள சட்டச் செயற்பாட்டாளர்கள் தமிழக அரசைக் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.
இந்த விடயத்தில் தாயகத்தில் உள்ள அரசியல்வாதிகளும் பொறுப் புணர்ந்து செயற்படவில்லை. இந்திய மண்ணில் பாரதூரமான குற்றச்செயல்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள். விடுவிக்கப்பட்ட பின் அவர்கள் இந்தியர்களாக இருந்தால் வீட்டுக்குப் போகலாம். வெளிநாட்டவர்களாக இருந்தால் நாடு கடத்தப்படுவார்கள். அல்லது இந்தியாவில் அவர்களைப் பொறுப்பேற்கக்கூடிய உறவினர்கள் இருந்தால் அவர்களிடம் போகலாம். சாந்தன் தாயகத்துக்கு வர விரும்பினார். தன் தாயுடன் இறுதிக் காலத்தைக் கழிக்க விரும்பினார். அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையவர்கள் இப்பொழுதும் திருச்சி சிறப்பு முகாமில்தான். தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதலைசெய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் அவர்களுடைய நாட்டுக்குத் திரும்பும் வரையிலும் அவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.
விடுவிக்கப்பட்ட சாந்தன் நாட்டுக்குத் திரும்பினால் இலங்கைச் சட்டங்களின் பிரகாரம் அவருக்கு ஆபத்து ஏற்படுமா என்ற ஒரு பயம் அவருக்காக உழைத்த சட்டச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் காணப்பட்டது. நாட்டிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, உரிய அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக ஒரு பதிலைப் பெறுவது நல்லது என்றும் அவர்களிற் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றி பெறவில்லை. தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவருக்கு அது தொடர்பாக எழுதப்பட்ட மின்னஞ்சலுக்குப் பதில் கிடைக்கவில்லை. சில அரசியல்வாதிகள் எங்கே, யாரிடம் அதைக் கேட்க வேண்டுமோ அங்கே கேட்காமல், சாந்தனின் வீட்டுக்குப் போய் அவருடைய தாயாரைக் கண்டு படமெடுத்துக் கொண்டார்கள்.
இவ்வாறு சாந்தனை விடுவிப்பதற்கு யாரிடம் கதைக்க வேண்டும்? எங்கே போராட வேண்டும்? என்பது தொடர்பாக தமிழ் அரசியல் சமூகம் தெளிவற்றுக் காணப்பட்டது. அல்லது பொறுப்போடு நடந்து கொள்ளவில்லை. அல்லது மூத்த சட்ட மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரான ஒருவர் கூறுவது போல அதற்கு வேண்டிய அரசியல் பெருவிருப்பம் (POLITICAL WILL) அவர்களிடம் இருக்கவில்லை.

திருச்சி சிறப்பு முகாமானது இதற்கு முன்னிருந்த சிறைகளை விடக் கொடுமையானது என்று அங்கு இருப்பவர்கள் கூறுகிறார்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரிகள் சிறப்பு முகாமுக்குள் இருந்தபடியே தமது வியாபாரத்தைத் தொடர்ந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் முகாமில் கட்டுப்பாடுகள் அதிகரித்தன. அது அரசியல்கைதிகளையும் பாதித்தது. சாந்தனைப் போன்றவர்கள் ஏனைய கைதிகளிடமிருந்து பிரிக்கப்பட்டு தனியறைகளில் வைக்கப்பட்டார்கள். சுற்றிவரக் கண்காணிப்பு. உடற்பயிற்சி செய்ய முடியாது. அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட அறைகளோடு கழிப்பறைகளும் இணைக்கப்பட்டிருந்தபடியால் வெளியே நடமாடுவதற்கும் வரையறைகள் இருந்தன. சிறைக்குள் சாந்தன் பெருமளவுக்கு ஒரு சன்னியாசி போலாகிவிட்டார் என்று வழக்கறிஞர் ஒருவர் சொன்னார். பெருமளவுக்குத் தனித்திருப்பதாகவும் எல் லாவற்றிலிருந்தும் விடுபட்டவர் போல காணப்பட்டதாகவும் அவர் சொன்னார். சிறப்பு முகாமில் அவர் சோறு சாப்பிடாமல் கஞ்சி மட்டும் தருமாறு கேட்பதாகவும் கூறப்பட்டது. சிறப்பு முகாமும் சாந்தனின் உடல் கெடுவதற்கு ஒரு காரணம். முடிவில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஒரு நிலை வந்த பொழுது மீண்டும் அவரது குடும்பத்தவர்கள் தமிழ்த் தேசிய அரசியற் சமூகத்தை அணுகினார்கள்.

அப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியற் சமூகம் அதே மந்தத்தனத்தோடு பொறுப்பின்றி நடந்துகொண்டது. சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பான முடிவை இலங்கையில் எடுக்கவேண்டியது வெளி விவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும்தான். சம்பந்தப்பட்ட அமைச்சுகளோடு மிகவும் பிந்தித்தான், அதாவது அவர் இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு கிட்டத்தட்ட 14 மாதங்களின் பின்னர் அதிலும் குறிப்பாக அவர் இறப்பதற்குச் சில கிழமைகளுக்கு முன்புதான் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.


தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த விடயத்தில் ஜனாதிபதியை, வெளி விவகார அமைச்சரை அணுகிய அதே காலப்பகுதியில் சாந்தனின் குடும்பத்தவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியிருக்கிறார்கள். மற்றொரு யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராகிய அங்கஜனும் அதில் அக்கறை காட்டியிருக்கிறார். அதாவது சாந்தனின் விடயத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அதற்கு வெளியே உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரும் அரசாங்கத்தை அணுகியதன் விளைவாகத்தான் நாடு திரும்புவதில் சாந்தனுக்கு இருந்த தடைகள் அகற்றப்பட்டன.
ஆனால், அப்பொழுது எல்லாமே பிந்திவிட்டது. விமானத்தில் பயணம் செய்ய முடியாத அளவுக்கு சாந்தன் நோயாளியாகி விட்டார் என்று ராஜீவ் காந்தி மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் ஒரு வழக்கறிஞரிடம் கூறியுள்ளார். முடிவில், சாந்தனின் உயிரற்ற உடலைத்தான் அவருடைய தாய்க்குக் காட்ட முடிந்தது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் அவர் ஒரு கைதியாகவே இறந்தார். உயிருடன் இருக்கும் போது அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை அனுபவித்தார். உயிர் பிரிந்தபின் அவருடைய உடலை இரண்டு தடவைகள் 'போஸ்மோர்டம் ' செய்திருக்கிறார்கள். முதலில் இந்தியாவில் பின்னர் இலங்கையில்.
சாந்தனுக்காக தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் சமூகம் பெரிய அளவில் போராடவில்லை. இப்பொழுதும் சிறப்பு முகாம்களில் இருப்பவர்களை விடுதலைசெய்வதற்காக யார் போராடுகிறார்கள்? சாந்தனோடு சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜையாகிய பேரறிவாளனை விடுவிப்பதற்காக அவருடைய தாயார் அற்புதம்மாள் தொடர்ச்சியாகப் போராடினார். ஒரு தாயின் நிகரற்ற போராட்டங்களில் அதுவும் ஒன்று. கிழக்கில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த அன்னை பூபதியின் போராட்டத்தைப்போல அது முன்னுதாரணமானது. ஈழத்தமிழ் அரசியலில் தாயக களத்துக்கு வெளியே நடந்த ஓர் அன்னையின் மகத்தான போராட்டமாக அற்புதம்மாளின் 32 ஆண்டுகாலப் போராட்டம் காணப்பட்டது.
சாந்தனை விடுவிப்பதற்காக அல்லது நாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தமிழ் அரசியல் சமூகம் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய போராட்டம் எதையும் முன்னெடுத்திருக்கவில்லை. அது மட்டுமல்ல, சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதிலும் தமிழ் அரசியல்வாதிகளிடம் பொருத்தமான அணுகுமுறைகள் இருக்கவில்லை. சாந்தனின் குடும்பம் சலிப்படைந்து, களைப்படைந்து, ஒரு விதத்தில் விரக்தியடைந்து தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கிப் போனது. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்கள் சொந்தக் கட்சிக்குள்

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்



# ஈழத்தில் கால்வைக்கும் சீனா; ஏன் பதறுகிறது இந்தியா?

ஈழத்தமிழர் விவகாரத்தில் 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இந்தியா பெரியளவில் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் இதனைப் புதுடில்லி ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது. மாறாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை எனவும் இந்தியா நியாயம் கற்பிக்க முற்படும். 2009 போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில், இலங்கை ஒற்றையாட்சி அரசைக் குறிப்பாகச் சிங்கள அரசியல் தலைவர்களைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகளுக்கு மாத்திரமே இந்தியா முன்னுரிமை கொடுத்து வருகின்றது. ஏனெனில் 2009 இல் விடுதலைப் புலிகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலிலேதான் இந்தோ - பசுபிக் விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. குறிப்பாகச் சீனச் செல்வாக்கு இலங்கையில் அதிகரிக்க ஆரம்பித்ததால் அதற்குப் போட்டியான செயற்பாடுகளில் இந்தியா ஈடுபட்டதே தவிர ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையில் எடுக்கவில்லை.

ஈழத்தமிழர் விவகாரத்தை 2009 இல் உரிய முறையில் கையாண்டிருந்தால் இலங்கை - குறிப்பாகச் சிங்கள ஆட்சியாளர்கள் - சீனாவின் செல்வாக்குக்கு முழுமையாக உட்பட்டிருக்கும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆனால் இந்த உண்மையை புதுடில்லி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. 2009 க்குப் பின்னர் இந்தோ - பசுபிக் விவகாரத்தில் அமெரிக்காவுடன் இணைந்து இந்தியா மேற்கொண்ட பல நடவடிக்கைகள் இலங்கைக்குச் சாதகமாக இருந்தனவே தவிர, ஈழத்தமிழர் நலன் ஒப்பாசாரத்துக்காக மாத்திரமே பேசப்பட்டது. அதாவது சிங்களத் தலைவர்களை தமது பக்கம் வைத்திருக்கும் ஓர் உத்தியாக ஈழத்தமிழர் விவகாரத்தைப் பேசி மறைமுக அச்சுறுத்தல் வழங்கப்பட்டது.



அதேநேரம் 2009 க்குப் பின்னரான சூழலில் குறிப்பாக 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின்போது சீனா சில உதவித்திட்டங்களை வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடமாகாணத்தில் மேற்கொள்ளத் தயாராக இருந்தது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட சீனாவின் சில உதவித் திட்டங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகள் மூலமாகத் தடுக்கப்பட்டிருந்தன. பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் சீனாவின் அரசியல் காய் நகர்த்தல்கள் என்பது வேறு. இந்தோ -பசுபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தைச் செலுத்த குறிப்பாக இந்தியாவுக்குப் போட்டியாகச் சீனா முடியுமானவரை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பது வெளிப்படையானது. ஆனால் தமிழர் பகுதிகளில் சீனாவையும் விடக் கூடுதலாக அக்கறை செலுத்த வேண்டிய உரிமை இந்தியாவுக்கே உண்டு. தமிழர்களைக் கேட்காமலேயே இந்தியா வர முடியும். இந்தியாவை ஈழத்தமிழர்கள் இன்றுவரையும் நேசித்துக் கொண்டே இருக்கிறார்கள். தமது அரசியல் விடுதலைக்கு இந்தியா ஏதேனும் ஒரு வழி சமைக்குமென இன்று வரையும் நம்புகிறார்கள். ஆனால் இந்திய இராஜதந்திரம் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தி, தமக்குரிய புவிசார் அரசியல் நலன்களையும் இலங்கைத்தீவில் தமது முதலீடுகளையும் மேற்கொள்ளும் முயற்சியில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றது.

அதேநேரம் சீன - இந்திய வர்த்தகம் மிக உயர்வாக இருக்கும் நிலையில் வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் சீனா மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சீனத் தூதுவர் வந்து செல்கின்றமை தொடர்பாக இந்தியா ஏன் கவலை கொள்கிறது என்ற கேள்விகள் மிகச் சமீபகாலமாக எழுகின்றன. யாழ்ப்பாணம், திருகோணமலை உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் இதுவரையும் சீனா எந்தவொரு பெரிய திட்டங்களையும் வகுக்கவில்லை. ஆனால், சில பகுதிகளில் தமக்குரிய பொருளாதாரத் தேடல்களை சீனா ஆரம்பித்திருக்கிறது. குறிப்பாக கடல் அட்டைப் பண்ணையாளர்களுக்கு உதவி வழங்குவது குறித்து சீனா ஆராய்கின்றது. சில பண்ணையாளர்களுக்கு உதவியும் வழங்கியுள்ளது. அத்துடன், பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான சில புலமைப்பரிசில் திட்டங்கள் பற்றியும் சீனா கலந்துரையாடி வருகின்றது. ஆனால் இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளமை போன்று எந்த ஓர் அலுவலகமும் சீனாவுக்கு யாழ்ப்பாணத்தில் இல்லை. இந்தப்பின்னணியில் சீனா தொடர்பாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகமும், யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகமும் ஏன் அதிகளவு அரசியல் காழ்ப்புணர்வு கொண்டுள்ளன எனப் புரியவில்லை. சீன-இந்திய வர்த்தகம் கடந்த 2023 ஆம் ஆண்டில் இந்திய ரூபாவில் பதினொரு இலட்சத்து 15 ஆயிரம் கோடியாக உயர்வடைந்துள்ளது என்றும் இந்த உயர்வு முன்னைய ஆண்டை விட 8.4 சதவீத அதகரிப்பாகும் எனவும் சீன சுங்கத்துறை வெளியிட்டுள்ள புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீன-இந்திய எல்லைகளில் இருதரப்பு மோதல்கள் தொடரும் நிலையிலும், சீன-இந்திய வர்த்தகம் உயர்வடைந்து வருவதாக சீன சுங்கத்துறை சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியாவிடம் இருந்து சீனா மேற்கொண்ட இறக்குமதி இந்திய ரூபாவில் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 300 கோடியாக குறைந்துள்ளது. இது முன்னைய ஆண்டை விட 37.9 சதவீதம் குறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் சீன இறக்குமதிகளை இந்தியா அதிகரித்தும் உள்ளது. குறிப்பாக ஒட்டுமொத்த இறக்குமதி 1.1 சதவீதம் அதிகரித்துள்ளது. சீனாவின் வர்த்தக உபரி 877.6 பில்லியன் டொலராக உயர்ந்தது என்றும் அந்தப் புள்ளி விவரத்தில் கூறப்பட்டுள்ளது. அதேவேளை 2015 இல் இருந்து 2021 வரை 75. 30 வீத வளர்ச்சி என்றும் அந்தப் புள்ளி விபரத்தில் மேலும் கூறப்பட்டிருக்கிறது. சீன சுங்கத்துறையினால் வெளியிடப்பட்ட இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

சீன - இந்திய எல்லை மோதல்கள் இருந்த போதிலும், சீன முதலீட்டுக்கு இந்தியா கதவுகளைத் திறந்திருக்கும் என்று தகவல் தொழில்நுட்ப துணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் புதுடில்லியில் அறிவித்திருந்தார். இதன் காரணமாகவே கடந்த 2023 ஆண்டு டிசம்பர் மாதம் வரை சீன - இந்திய வர்த்தகம் அதிகரித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அதேநேரம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் சீனாவுக்குப் பயணம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கைத் தீவில் முதலீடு செய்யத் தயாராகவுள்ள சீன முதலீட்டாளர்களைச் சந்தித்து உரையாடியிருந்தார்.

பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலா தொடர்பான அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்த ரணில், இலங்கையின் புவிசார் அமைவிடம் காரணமாக ஆசிய பிராந்தியத்தில் மேற்குச் சந்தையை வெற்றிகொள்வதற்கு விசேட சந்தர்ப்பம் காணப்படுவதாக சீன முதலீட்டாளர்களிடம் சுட்டிக்காட்டியிருந்தார். உலகில் உள்ள அனைத்து சக்திவாய்ந்த பொருளாதார நாடுகளுடன் நட்புறவாகச் செயற்படுவதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனவும், அதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்பதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியிருந்தார். ஆகவே இவ்வாறு இந்தியாவும் இலங்கையும் சீனாவுடன் உறவுகளையும் வர்த்தகச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வரும் சூழலில், எதற்காக தமிழர் பகுதிகளில் சீனா தொடர்பான அச்சத்தை இந்தியா வெவ்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகின்றது?

2009 க்குப் பின்னரான சூழலில் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் தங்கள் சுயமரியாதையை அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு விலைபேசியுள்ளமை கண்கூடு. இதன் காரணகாரியமாகவே அமெரிக்க இந்திய அரசுகள் ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களின் முதுகில் சவாரிவிடுகின்றன என்பதும் பகிரங்கம். குறிப்பாக இந்தியா ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்தைப் பயன்படுத்தி இலங்கைத்தீவில் சிங்கள ஆட்சியாளர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என புதுடில்லி நம்புகின்றது. ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ, மகாநாயக்கத் தேரர்களோ இந்தியாவை முழுமையாக நம்பத் தயாராக இல்லை. இது இந்தியாவுக்குத் தெரியாத சங்கதியுமல்ல. இதற்காகவே பௌத்த விகாரைகளுக்கும் நிதியுதவி வழங்கும் திட்டங்களை டில்லி அவ்வப்போது செய்து வருகின்றது.

இந்தியாவின் புத்தகாயாவில் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு, அவற்றைத் தரிசிக்க கட்டுநாயக்கவிலிருந்து நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவை முழுமையாக நம்பத்தயாராக இல்லை என்பதை புதுடில்லி உணராதவரை ஈழத்தமிழர் விவகாரத்துக்கும் தீர்வில்லை. இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீன செல்வாக்கைத் தடுக்க சிங்கள ஆட்சியாளர்களுடன் மாத்திரம் குறிப்பாக 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பை மாத்திரம் திருப்திப்படுத்தினால் போதும் என்று இந்தியா நம்புவது டில்லியின் புவிசார் அரசியல் சூழலில் சாதகமான நிலையைத் தோற்றுவிக்காது. மாறாக ஈழத்தமிழர் விவகாரத்தில் முழுமையான அரசியல் தீர்வுக்கு இந்தியா வழி சமைத்தால் மாத்திரமே இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பு நிலைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலுக்குள் வந்த தற்கொலைக்குண்டுகள்





## கோயிலைக் காப்பாற்றும் முயற்சி வீரசுப்பிரமணியத்துக்கு வினையானது!

○ கே.வி.தவராசா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரசுப்பிரமணியம் சிறுவயதிலிருந்தே கொழும்பில் கல்வி கற்ற பின்னர், கதிரேசன் வீதியில் அவரது தந்தையாரின் வியாபார ஸ்தாபனத்தை தனது சகோதரரான பாலரட்ணத்துடன் இணைந்து நடத்தி வந்தார். ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி மீது தீராத பக்திகொண்ட அவரது தந்தையார் குழந்தைவேலு தனது இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் முருகப் பெருமானின் பெயரான பாலரட்ணம், வீரசுப்பிரமணியம் என முறையே பெயரிட்டிருந்தார். ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி தேவஸ்தானமும் வீரசுப்பிரமணியம் நடத்திய வியாபார ஸ்தாபனமும் கதிரேசன் வீதியில் அருகருகே அமைந்திருந்தன. வீரசுப்பிரமணியம் தனது தொழில் நேரத்தைத் தவிர்ந்த அனைத்து நேரத்திலும் முருகனுக்குச் சேவைசெய்வதையே வழமையாகக் கொண்டிருந்தார்.

### வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு

1989 ஆம் ஆண்டில் இருந்து ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி தேவஸ்தானத்தின் நிர்வாக இயக்குநராக வீரசுப்பிரமணியமே கோவிலை நடத்தி வந்தார் .

2000 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி.

வழமைபோல் கோவிலுக்குச் சென்ற கோவிலின் குருக்களான பரமேஸ்வரக் குருக்கள், அங்கு தேங்காய் வைக்கும் அறையில் ஒரு பார்சல் இருப்பதாக வீரசுப்பிரமணியத்திடம் கூறியுள்ளார்,உடனடியாக அந்தப் பார்சலை வீரசுப்பிரமணியம் திறந்து பார்த்த பொழுது அதற்குள் தற்கொலை அங்கி, பிஸ்டல் , 32 கைக்குண்டுகள், வெடிபொருட்கள் அடங்கிய 4 குப்பிகள், 7 டெட்டனேட்டர் , 8 சயனைட் வில்லைகள் , பற்றறிகள், அத்துடன் "எனது உடலில் வெடிமருந்து உள்ளது. என்னைப் போக விடு" எனக் குறிப்பிட்டு லெமினேட் செய்யப்பட்ட ஒரு கார்ட் உள்ளிட்ட பொருட்கள் காணப்பட்டன.

இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த வீரசுப்பிரமணியம், பரமேஸ்வரக் குருக்களிடம் "இந்தப் பார்சல் எப்படி கோவிலுக்குள் வந்தது?" என்று கேட்டுள்ளார். பரமேஸ்வரக் குருக்கள் "எனக்கு அதனைப் பற்றி தெரியாது" என்று கூறவே, சில நிமிடம் செயலிழந்த வீரசுப்பிரமணியம் அடுத்து என்ன செய்வதென்று தீவிரமாக யோசித்தார்.

"பொலிஸாருக்கு அறிவிப்பதா?இல்லையா?"

"பொலிஸாருக்கு அறிவிப்பதன் மூலம் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன?"

என்று அவர் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைக்குத் தள்ளப்பட்டார். இறுதியாக, "பொலிஸுக்கு அறிவித்தால் தேவஸ்தானத்தின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுவிடும், பக்தர்கள் தரிசனம் செய்யவரமாட்டார்கள், ஆகையால் தேவஸ்தானத்தின் பெயரை காப்பாற்ற வேண்டும்"

என்ற முடிவுக்கு வீரசுப்பிரமணிடம் வந்தார்.

வெடிபொருட்கள் அடங்கிய பொதி பற்றிய தகவலை பொலிஸாருக்கு அறிவிக்காமல் ,கோயிலிலிருந்து யாருக்கும் தெரியாமல் அகற்றிவிட முடிவெடுத்தார். தனது வாகனத்தில் அந்தப் பொதிகளை ஏற்றிக்கொண்டு களனி ஆற்றில் வீசுவதற்காகச் சென்றார். ஆனால் களனி ஆற்றுப்பகுதியில் அதிகமான சன நடமாட்டம் இருந்ததால், தனது திட்டத்தை மாற்றி வத்தளை, எலக்கந்த பாதையிலுள்ள முத்துராஜவெல பகுதியில் உள்ள நீரோடையில் வெடிபொருட்கள் அடங்கியுள்ள பொதியை வீசிவிட்டு, வந்தார். அப்படிப் பொதிகளை அவர் நீரோடையில் எறிந்து, சில மாதங்கள்வரை எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. இதனால் கோயில் பெயரை காப்பாற்ற தான் எடுத்த முடிவு சரியென தன்னைத்தானே வீரசுப்பிரமணியம் மகிழவும் செய்தார். ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக காலம் நீடிக்கவில்லை.

இனந்தெரியாத நபர் ஒருவர் கொடுத்த தகவலால், வீரசுப்பிரமணியம் 2000 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி காலை 9.30மணிக்கு கைது செய்யப்பட்டார்.

முத்துராஜவெல பகுதியில் உள்ள நீரோடையில் அவரால் வீசப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்கள், தற்கொலை அங்கிகள் அடங்கிய பொதியும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

வீரசுப்பிரமணியத்துக்கு எதிராகப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தற்கொலை அங்கிகளையும் ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக 20 வருட சிறைத்தண்டனை வழங்கக்கூடிய குற்றம் சுமத்தப்பட்டு, 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் பிரகாரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்காமல் வெடிபொருட்கள், தற்கொலை அங்கிகளை உடைமையில் வைத்திருந்ததாகவே அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் வழக்கின் சான்றுப்பொருள்களாக பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் குற்றஒப்புதல் வாக்குமூலம் பிரதான சாட்சியமாகவும் மேலும் 06 சாட்சிகளும் உள்ளடக்கப்பட்டு , இந்த வழக்கு விசாரணை 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 04ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரா ஏக்கநாயக்க முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டு , சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர்.

சந்தேகநபர் ஒரு சூழ்நிலைக் கைதியே தவிர எந்தப் பொருட்களையும் உடைமையில் வைத்திருக்கவில்லை. பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கத் தவறியது மட்டுமே அவர் செய்த ஒரே குற்றம். சட்டத்தின்படி பொலிஸாருக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை . அதுவும் தனது சொந்த நலனுக்காகச் செய்யவில்லை. கோவிலின் தர்மகர்த்தா என்ற முறையில் கோயிலுக்குக் களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஒரே நன்நோக்கத்தோடு செயற்பட்டாரே தவிர சட்டத்தை உதாசீனம் செய்யும் நோக்கத்துடன் அல்ல. எனவே சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுபரிசீலனை செய்து, தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்துக்காக மட்டும் குற்றச்சாட்டுப் பத்திரத்தைத் திருத்தி அமைக்கவேண்டும்' என்று சந்தேகநபர் சார்பில் நீதிமன்றத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை அரசு தரப்பும் ஏற்றுக்கொண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் குற்றப்பத்திரம் திருத்தி அமைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 2001.11.07இல் சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிபதி அவருக்கு ஒரு மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். வீரசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டது 2000 ஆம் ஆண்டு மே மாதம். ஆனால் அவர் விடுதலை செய்யப்பட்டதோ 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம். ஏறத்தாழ 17 மாதங்களுக்கு மேல் அவர் சிறையில் வாடியுள்ளார்.

வீரசுப்பிரமணியம் வெடிபொருட்களையும் தற்கொலை அங்கிகளையும் உடைமையில் வைத்திருந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் , அவர் நிரபராதியென வாதாடி அவருக்கு வழக்கிலிருந்து விடுதலை பெற்றுக்கொடுப்பது கடினமான காரியமல்ல. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு முடியும் வரை பிணை வழங்க நீதிமன்றுக்கு அதிகாரம் இன்மையால் வழக்கு முடியும்வரை பல வருடங்களுக்கு சிறைவாசம் என்பதனை கருத்தில் கொண்டு குற்றப்பத்திரத்தை திருத்தி அமைக்க ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதால், வீரசுப்பிரமணியத்துக்கு ஆகக் குறைந்த தண்டனையாக 30 நாள் தண்டனை விதிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்படி 5 ஆம் பிரிவின் கீழ் வீரசுப்பிரமணியம் குற்றவாளியாகக் காணப்பட்டாலும் நியாயத்தின்படி வீரசுப்பிரமணியம் செய்ததெல்லாம் முருகன் கோயிலின் பெயர் கெட்டுவிடக்கூடாதென்பதற்காகவே. அதற்குக் கிடைத்ததுதான் இந்தத் தண்டனை. சட்டத்தின்படி தண்டனை சரியாக இருந்தாலும் நியாயமாகச் சிந்திக்கும் யாராகவிருந்தாலும் இந்தத் தண்டனை ஒரு மனத்தாக்கத்தையும் மனவேதனையையும் உருவாக்கியே தீரும். நன்னடத்தை காரணமாக ஒரு மாதச் சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டதை தொடர்ந்து 17 நாட்களில் வீரசுப்பிரமணியம் விடுதலையானார். அதன் பின்னும் அவர் சமயம், சமூகம் என பொதுத்தொண்டு புரிந்துவந்தார்.

கதிரேசன் வீதியில் அமைந்திருந்த முன்னாள் மைலன் தியேட்டரை வீரமைலன் திருமண மண்டபமாக மாற்றி அதனை நிர்வகித்து வந்ததுடன், வசதியற்ற குடும்பங்களின் திருமணங்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளையும் செய்தார். சில வேளைகளில் எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக அந்த மண்டபத்தில் திருமணங்களையும் நடத்திக் கொடுத்துள்ளார்.

### சுட்டுக்கொலை

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்திலிருந்து இரவு 8 மணியளவில் துணைவியாருடன் கொட்டாஞ்சேனையிலிருந்த தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார் வீரசுப்பிரமணியம். அப்போது கடத்தல், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் சில ஆயுததாரிகளினால் வீரசுப்பிரமணியமும் அவரது மனைவியும் வீதியில் வைத்துச் சுடப்பட்டனர்.முதல் துப்பாக்கி ரவை வீரசுப்பிரமணியத்தின் மார்பில் பாய்ந்தது. இரண்டாவது சூடு அவரது மனைவியின் தோளைத் தாக்கியது. வீரசுப்பிரமணியம் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் மரணமடைந்தார். மனைவி தோளில் சூட்டுக்காயங்களு டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அன்றிரவே இந்தச் சம்பவத்தைக் எனது உறவினர் ஒருவர் உடனடியாக எனக்கு தொலைபேசி மூலம் அறிவித்தார். இரவு 10 மணியளவில் நானும் எனது துணைவியாரும் மருத்துவமனைக்குச் சென்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அவரது மனைவியையும் வேதனையால் அழுது கதறிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த அவர்களது பிள்ளைகளையும் பார்த்து அவர்களுக்கு ஆறுதல்கூறினோம்.




### சடலத்தைத் தகனம் செய்ய நீதிபதி அனுமதி

வீரசுப்பிரமணியம் கொலை செய்யப்பட்டமையால் அவரது சடலத்தை இந்து முறைப்படி தகனம் செய்வதற்குப் பொலிஸார் முதலில் அனுமதியளிக்க மறுத்துவிட்டனர். ஏனெனில் கொலையாளியை கண்டுபிடிக்கவும் மேலதிக விசாரணைக்காகவும் உடலை இந்து முறைப்படி தீயிட்டு தகனம் செய்ய சட்டம் இடமளிப்பதில்லை.

வீரசுப்பிரமணியத்தின் சகோதரன் பாலாவின் வேண்டுகோளையடுத்து இந்துக்களின் முறைப்படி தீயிட்டுத் தகனம் செய்ய அனுமதியளிக்கும்படி நான் நீதிமன்றத்தை வேண்டிக் கொண்டேன். கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் இந்துக்களின் முறைப்படி தீயிட்டுத் தகனம் செய்ய அனுமதியளித்தார். அதனையடுத்து ஈமக்கிரியைகள் இந்து முறைப்படி நடந்து முடிந்தன.

### மஜிஸ்ரெட் விசாரணை

வீரசுப்பிரமணியத்தின் கொலை சம்பந்தமான மஜிஸ்ரெட் விசாரணை கொழும்பு நீதிமன்றில் நடைபெற்றது. வீரசுப்பிரமணியத்தின் மனைவி முதலில் நீதிமன்றில் சாட்சியமளிக்க அச்சத்தின் காரணமாக தயங்கினார். இதனால் எனது வேண்டுகோளையடுத்து நீதிபதியின் உத்தியோகபூர்வ அறையில் விசாரணை நடைபெற்றது. விசாரணையில் தனது கணவருக்குப் பல தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும், பணம் கேட்டு மிரட்டியதாகவும் மிகவும் அச்சத்தின் மத்தியில் அவர் சாட்சியமளித்தார். இன்றுவரை வீரசுப்பிரமணியத்தைக் கொன்ற கொலையாளிகள் கைது செய்யப்படவேயில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555






**பாக்கியராஜ் நயனிகா**
தரம் - 1
யா/ பெரிய புலம் மகா வித்தியாலயம்




**அ.வைஷ்ணவி**
தரம் -7
யா/மகாஜனக் கல்லூரி.



**H.கிந்துஷா**
தரம் - 5A
வ/ பூவரசங்குளம் ஆரம்பப் பாடசாலை.




**வ.திவ்யன்**
தரம் - 5
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்




**அபிஷாந்,**
தரம் - 8
கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாசாலை

**FISH**



I am a fish.
I live in the sea.
I love to swim.
I can swim fast.

**ELEPHANT**



I am an elephant.
I am big.
I have two ears.
I have four legs.

# சாந்தன்:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராடுகிறார்கள்? கடந்த வாரம் தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமைகளை நிரூபித்த ஒரு வாரம். முதலாவது சாந்தனின் மரணம். இரண்டாவது தமிழரசுக் கட்சி நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டமை. அங்கே அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்தார்களா இல்லையா என்பது வேறு கதை. கட்சிக்குள் வந்த பிணக்கை கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியவில்லை என்பது ஒரு பாரதூரமான தோல்வி. அதனைத் தீர்ப்பதற்கு கட்சிக்கு வெளியேயும் சிவில் சமூகங்கள் இல்லை என்பது மற்றொரு தோல்வி. கடந்த 15 ஆண்டு காலத் தோல்விகளுக்கு அந்தக் கட்சி பொறுப்பு என்ற படியால் அது அழியட்டும்அதன் வாக்குகள் தென்னிலங்கைக் கட்சிகளுக்குப் போனால்கூட பரவாயில்லை என்று கருதுமளவுக்கு சில சிவில் சமூகப் பிரதிநிதிகள் காணப்படுகிறார்கள் என்பது அதைவிடத் தோல்வி.

இது ஒரு தேர்தல் ஆண்டு. ஜனாதிபதித் தேர்தலில் தற்போதுள்ள நிலைவரங்களின்படி அரச தரப்பு, எதிர்க்கட்சி, ஜே.வி.பி. என்று மூன்று அணிகள் போட்டியிடக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. தென்னிலங்கையில் படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் ஜே.வி.பி. ஆதரவு அலை ஒன்று வீசுகிறது. அது வாக்குகளாக மாறுமா? இல்லையா? அல்லது அதைக் கண்டு பயந்து ஏனைய வலதுசாரிக் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியத்துக்குப் போகுமா? இல்லையா? என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

மேற்சொன்ன மூன்று தரப்புகளும் போட்டியிட்டால், சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாகப் பிரியும். அப்பொழுது தமிழ்த் தரப்பு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மேலெழக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். ஆனால் அவ்வாறு அரசியல் களத்தில் துணிந்து புகுந்து விளையாடுவதற்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளதில் பெரிய கட்சி நீதிமன்றம் ஏறத் தொடங்கிவிட்டது. மற்றொரு கட்சி தேர்தலைப் புறக்கணிக்கப்போவதாக அறிவித்துவிட்டது. அதாவது துணிந்து புகுந்து விளையாடத் தயாரில்லை. ஒரு பொது வேட்பாளரை நிறுத்தப் போவதாகக் கூறிய குத்து விளக்குக் கூட்டணி அதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறதே தவிர செயற்படுவதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் குத்துவிளக்குக் கூட்டணி அந்தப் பரிசோதனையில் இறங்குமா?
இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெல்லப்போகும் கட்சி அல்லது கூட்டு. அடுத்த ஆண்டு அநேகமாக பொதுத்தேர்தலை வைக்கும். தொடர்ந்து மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சிசபைத் தேர்தல் போன்றன வைக்கப்படலாம். அதாவது வரும் இரண்டு ஆண்டுகளும் தேர்தல் ஆண்டுகளாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மக்கள் இயக்கம் எதுவும் இல்லை. இருப்பதெல்லாம் தேர்தல் கேட்கும் கட்சிகள்தான்.


அடுத்தடுத்து வரும் இரு தேர்தல் ஆண்டுகளை எதிர்கொள்ள தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளிடம் என்ன உபாயம் உண்டு? நிர்ணயகரமான ஒரு காலகட்டத்தில், அரங்கில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தரப்புகளை இந்தியாவும் அமெரிக்காவும் ஏனைய பேரரசுகளும் அணுகிக் கையாள முற்படும் ஒரு காலகட்டத்தில், அரங்கில் துணிந்து புகுந்து விளையாடவேண்டிய தமிழ்த் தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

அரசியலில் துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் 'ரிஸ்க்' எடுக்கும். 'ரிஸ்க்' எடுக்கும் தரப்புகள்தான் கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைக்கும். தலைமை தாங்கும். துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் வரலாற்றை உருவாக்குகின்றன. உட்கட்சிச் சண்டையை நீதிமன்றத்துக்குக் கொண்டு போகும் கட்சிகள் வரலாற்றை உருவாக்குவதில்லை. அதுமட்டுமல்ல தேர்தல் வரும்பொழுது தமிழ்த் திரைப்படங்களில் கடைசி நேரத்தில் விசிலடித்துக் கொண்டு வரும் பொலிஸ்போல அறிக்கை விடும் சிவில் சமூகங்களும் வரலாற்றைத் தீர்மானிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ரை ஐயோ...!

கற்சிலைமடு தாரு




சஞ்சீவி சிறுகதை

அன்று வெள்ளிக்கிழமை. நேரம் ஏழு மணியிருக்கும். ஜன்னலினூடாக வந்த சூரியக் கதிர்கள் என்னைச் சூடேற்றி எழுப்பிக்கொண்டிருந்தன. தூக்கம் கலைந்து எழுந்தேன். கண்களைக் கசக்கிக்கொண்டு வானை நோக்கியபடி வெளியேறினேன். நீலம் படர்ந்திருந்த வானத்தில் பறவைகள் ஆங்காங்கு பறந்துகொண்டிருந்தன. குருவிகளின் கீச்சிடும் சத்தம் என் காதுகளை மேலும் இனிமையாக்கியது. விவசாயிகள் மாட்டுவண்டில்களில் தத்தம் வயல்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். வேறு தொழிலுக்குச் செல்வோர்களும் தங்கள் பணிகளின் நிமித்தம் எங்கோ பயணித்துக்கொண்டிருந்தார்கள். பாடசாலை மாணவர்கள் நடந்தும், சைக்கிள்களிலும் பள்ளிக்குச் செல்லும் காட்சிகளும் தென்பட்டன. பலர் பேருந்தின் வருகைக்காகப் பேருந்து நிலையத்தில் குழுமி நின்றனர்.
அந்நிகழ்வுகளைப் பார்த்து இரசித்தபடி என் கடமைகளைச் செய்யப் புறப்பட்டேன்.
அம்மம்மாவுக்குத் தேவையான நீரைக் கிணற்றில் அள்ளிக் கொடுத்துவிட்டு, சாமி அறையிலிருந்து விபூதியையும் எடுத்துவந்து கொடுத்தேன்.
“அப்பனே பிள்ளையாரப்பா… நீதானப்பா எல்லாரையும் காப்பாத்த வேணும்…”
என்று சொல்லியபடி விபூதியை நெற்றியில் பூசிக்கொண்டதைப் பார்த்தபடியே என் கடமைகளுக்காகப் நான் புறப்பட்டேன். காலைக்கடனை முடித்துவிட்டு, பற்தூரிகையோடு மீண்டும் கிணற்றடிக்குச் சென்றுகொண்டிருக்கையில்….
“தம்பி… தம்பி…”
அப்பா தொலைவிலே கூப்பிடும் சத்தம்.
“ஓமப்பா… வாறன்… வாறன்…”
என்றபடி ஓடிச்சென்று பார்த்தபோது வயலுக்கு நீர் இறைத்துக்கொண்டிருக்க, எங்கள் தோட்டக் கிணற்றில் பூட்டப்பட்டிருந்த பெரிய மோட்டரிலிருந்து நீர் அருவியாகக் கொட்டிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பார்க்கும்போது, ஒரு குளியல் போடவேண்டும் என்ற ஆசை மனதுக்குள் தோன்றியது. ஆனாலும் அப்பா பேசுவார் என்ற பயத்தோடு, அவரின் தேவைகளை நிறைவேற்றிவிட்டு, முகம் கழுவியபடி வீட்டுக்கு வந்தேன். விபூதி தரித்துக் கடவுளை வேண்டிவிட்டு, வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.
“தம்பி.. இந்தா தேநீர்…”
அம்மா சுடச்சுடக் கொண்டுவந்த தேநீரைக் குடித்தபடியே அம்மம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தேன். பின் அப்பாவுக்காகப் போத்தலில் ஊற்றித் தந்த தேநீரை எடுத்துக்கொண்டு வயலைநோக்கிப் புறப்பட்டேன். வயலுக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் இருமருங்கும் கால்வாய்களில் நீர் ஓடுகின்ற சத்தம் ஒலித்துக்கொண்டிருந்தது. கால்வாய்களின் அருகுப்பகுதிகளில் தென்னந்தோப்புகளும், வயல்வெளிகளும் காணப்பட்டன. சின்னஞ்சிறுவர்கள் அவ்வாய்க்காலில் குதித்துக் குளித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் தொலைவில் தூண்டில் போட்டுக்கொண்டிருப்பதும் தெரிந்தது. இவற்றினைப் பார்த்தபடியே வயலுக்கு நகர்ந்துகொண்டிருந்தேன். மனம் இனிமையான பொழுதை அனுபவித்துக்கொண்டிருந்தது.
“அப்பா இந்தாங்கோப்பா….”
கொண்டு வந்த தேநீரை அப்பாவிடம் கொடுத்துவிட்டு, அருகிலிருந்த மண்வெட்டியை எடுத்து வயலுக்கு நீர் பாய்ச்சத் தொடங்கினேன். அப்போதுதான் தனு அவனுடைய அப்பாவுடன் வயல்களைப் பார்வையிட்டபடி வந்து சேர்ந்தான்.
“டேய்… மச்சான்.. இண்டைக்கு ஒட்டிசுட்டான் சிவன் கோயில் தேராமடா… போவம் வாறியே?”
“உண்மையாவோடா..?”
“ஓமடா… உண்மையாத்தான்… எல்லாப் பொடியளும் விடியவே போறாங்களடா..”
“சரி வயலைப் பாத்திட்டு வா… ஆத்தில குளிச்சிட்டுப் போவம்”
தனுவோடு கதைத்துவிட்டு நான் வீட்டுக்கு வந்து, எனது ஆடைகளை ‘அயர்ன்’ பண்ணிவிட்டு, ஆற்றுக்குப் போவதற்குத் தயாராகினேன். எங்கள் வயல்காணிக்குப் பக்கத்தில்தான் பேராறு ஓடுகிறது. வருடத்தில் எப்போதும் வற்றிவிடாமல் ஓடுவதால் அங்குதான் நாங்கள் அதிகம் குளிப்பதுண்டு.
“டேய்… வாறியோ வேகமா…. நான் வந்திட்டன்”
“வரலாம் நில்லுடா… வரலாம்…”
தனுவின் சத்தம் கேட்டது. உடனே அடுப்படியில் நின்ற அம்மாவை நோக்கி ஓடினேன்.
“அம்மா.. இண்டைக்குக் கோயிலுக்குப் போப்போறம்.. ஆத்தில குளிக்கப் போகட்டா?… தனு வந்திருக்கிறான்…”
“விடியக்காலத்தால ஆத்துக்குப் போறியளோ… கொப்பர் வந்தா பேசுவார்… கவனமா குளிச்சிட்டு வேகமா வாங்கோ..”
அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டபடியே தனுவோடு ஆற்றை நோக்கி ஓடினேன். எங்களின் பின்னால் தனுவின் நாய்க்குட்டி கண்ணம்மாவும் ஓடிவந்துகொண்டிருந்தது. கண்ணம்மா என்றால் தனுவுக்கு உயிர். தனுவெண்டால் கண்ணம்மாவுக்கு உயிர். ஓடி வந்த கண்ணம்மா தனுவின் தோள்களில் பாய்ந்து ஏறிக்கொண்டது. ஒற்றையடிப் பாதையினூடாக ஆற்றைநோக்கிப் பயணித்தோம். ஆற்றைச் சூழ்ந்திருந்த இயற்கைக் காட்சி எங்களை அமைதிப்படுத்தியது.
ஆற்றங்கரையின் நீளத்துக்கும் மருதமரங்கள் காணப்பட்டன. அவற்றுக்கிடையே மாமரங்களும் நின்றிருந்தன. குரங்குகள் மாங்காய்களைப் பறித்து நாசம் செய்துகொண்டிருந்ததை அவதானித்தோம். குட்டிக் குரங்குகள் அங்கும் இங்கும் பாய்ந்து விளையாடிக்கொண்டிருந்தன.
பறவைகளும் பழுத்திருந்த பழங்களைத் தின்றுகொண்டிருந்தன. அதைப்பார்த்த எனக்கும் மாங்காய் சாப்பிட வேண்டும்போல் வாய் ஊறியது. சற்றும் யோசிக்காமல் உடனே பக்கத்தில் நின்ற தனுவை ஏற்றி மாங்காய் பறித்துக்கொண்டேன்.
“டேய் வீட்டபோய் உப்பும் தூளும் எடுத்துட்டு வாடா… செமயா இருக்கும்..”
தனுவின் வார்த்தையைக் கேட்டபடி வீட்டை நோக்கி ஓடினேன். சிரட்டையில் உப்பும், தூளும் எடுத்து வந்தேன். பறித்த மாங்காய்களை ஆற்றுநீரிலே நன்கு கழுவிய பின் மாமரத்திலே குத்தி மாங்காய்களை உடைத்துக்கொண்டோம். உடைத்த துண்டுகளை உப்புத்தூளுடன் தொட்டுத் தொட்டுத் தின்னும்போது சொர்க்கம் தெரிவதை உணர்ந்தேன். அது கறுத்தக்கொழும்பான் மாங்காய் என்ற படியால் அவ்வளவு சுவையாக இருந்தது.
திடீரென ஆற்றில் பெரிய சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.
“டேய்… கண்ணம்மா ஆத்துக்குள்ள விழுந்துட்டடா…”
என்று சொல்லி முடிப்பதற்குள் தனு சற்றும் யோசிக்காமல் தான் பாசத்தோடு வளர்த்த கண்ணம்மாவைக் காப்பாற்ற ஆற்றினுள் குதித்து விட்டான். நானோ என்ன செய்வதென்றுதெரியாமல் அங்குமிங்கும் பார்த்தேன். கண்ணுக்கெட்டிய தூரம்வரை யாரையும் காணவில்லை. நாய்க்குட்டியைக் காப்பாற்றச் சென்ற தனுவோ ஆற்றுப்பள்ளத்தினுள் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தான். எனக்கோ நீச்சல் தெரியாது. அவனுக்கும்தான்.
“ஐயோ!… ஐயோ! ஓடியாங்கோ… ஓடியாங்கோ….”
என்று வீரிட்டுக் கத்தினேன். எவரும் வரவில்லை. கண்ணம்மாவையும், தனுவையும் எப்படிக் காப்பாற்றுவது என்று எனக்குத் தெரியவில்லை. உடம்பு பயத்தால் நடுங்கியது. ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை. சற்றுநேரத்தில் பெரிய ஆற்றுச்சுழி அவனை அடித்துச்செல்ல ஆரம்பித்தது. உடனே நான் அவன் செல்லும் பக்கமாகப் பெரிய கட்டை ஒன்றை எடுத்துப் போட்டேன். ஆனால் எந்தப் பலனும் இல்லை. நாய்க்குட்டியையும் காணவில்லை. பின் தனுவையும் காணவில்லை. தண்ணீருக்குள் தாழ்ந்து போனான். எனக்குப் பயம் இன்னும் அதிகரித்தது. பயத்தில் கத்திக்கொண்டு நின்றேன். திடீரென தாண்டுபோன தனு ஆற்றுக்குள் இருந்த மருத மர வேரைப்பிடித்துக்கொண்டு கிடந்தான். உடனே வயல்வெளிக்கு ஓடினேன். அப்போது யாரோ வயலுக்குள்ளிருந்து வந்துகொண்டிருந்தார்கள். உடனே அண்ணனை அழைத்துக் கத்தியபடி ஆற்றங்கரையை நோக்கி ஓடினேன். அண்ணனின் உதவியுடன் தனு மீட்கப்பட்டான். அவனுடைய கண்கள் மூடியிருந்தன. நான் செத்துவிட்டான் என்றே நினைத்தேன். உடனே அண்ணன் அவனுடைய வயிற்றை அமத்திக் கொண்டிருந்தார். தண்ணீரைக் கனக்க குடித்துவிட்டதால் தனுவின் வாய்க்குள்ளிருந்து நீர் வெளியேறியது.
“வற்றாப்பளைத் தாயே இவன தப்பிடோனுமம்மா….
தப்பிடோனுமம்மா…”
மனதுக்குள் வற்றாப்பளைக் கண்ணகித்தாயை வேண்டினேன். தனுவும் கண் விழித்தான். இப்போதுதான் எனக்கு நிம்மதி வந்தது. இருவரும் சற்று ஓய்வெடுத்தபின் வீட்டை நோக்கி நகர்ந்தோம். எங்களுடைய உள்ளத்தில் கண்ணம்மாவின் நினைவே வந்துகொண்டிருந்தது. வீட்டுக்குச் சென்று நடந்ததைக் கூறினோம். ஆனால் ஆற்றில் தனு தாண்ட செய்தியைக் கூறவில்லை. தனு வீட்டிலும் இதைத்தான் கூறினோம். கண்ணம்மாவின் இழப்பு எல்லோரையும் கலங்க வைத்தது. கவலையுடன் இருவரும் கோவிலை நோக்கிச் சைக்கிள்களில் பயணித்தோம். இன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் கோவிலில் தேர்த்திருவிழா. வீதிகளில் நிறைந்த மக்கள் கூட்டம் கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். வீதிகளில் சொகுசுக்கார்களும், பெரிய பெரிய வாகனங்களும் சென்றுகொண்டிருந்தன. சனங்கள் மாட்டு வண்டில்களிலும் பயணித்துக்கொண்டிருந்தார்கள். இவற்றைப் பார்த்தபடியே நாங்களிருவரும் கண்ணம்மாவின் பிரிவுத்துயரோடு கோவிலை வந்தடைந்தோம்.
வந்தவுடன் மிதிவண்டிகளை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டுக் கோயிலுக்குள் சென்றோம். இராஜகோபுரம் எங்களை வரவேற்கும் படி அழகாக இருந்தது. தேர் இழுப்பதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இராஜ கோபுரத்தை வணங்கிபடி உள்ளே சென்றோம். கோயிலைச் சுத்தி வணங்கிவிட்டுக் கடைபோட்டிருக்கும் பக்கம் சென்றோம். அங்கும் சனங்கள் கூடி நின்றார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அங்குமிங்கும் திரிந்தபடி தமக்கு விரும்பிய பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். எங்களுக்குக் கோயில் நிகழ்வுகள் மகிழ்ச்சியையே தரவில்லை. தனுவுக்கு மனது முழுவதும் கண்ணம்மாவின் நினைவே ஓடிக்கொண்டிருந்ததை உணர்ந்தேன். பக்த அடியவர்கள் பலவிதமான நேர்த்திகளைச் செய்யும்வண்ணம், கோயிலை வலம்வந்து கொண்டிருந்தார்கள். பாற் காவடி, பன்னீர்க் காவடி, தீர்த்தக்காவடி, தூக்குக் காவடி, கற்பூரச்சட்டி, பாற்செம்பு, பறவைக் காவடி என நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் ஐஸ்கிறீம் வாங்கிச் சுவைத்தபடி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தோம். நேரமும் சென்றுகொண்டிருந்தது. காலை ஒன்பது மணியிருக்குமென நினைக்கிறேன். தேர் இழுக்க ஆரம்பித்துவிட்டது. நாங்களும் ஓடிச்சென்று தேர் வடத்தினைப் பிடித்துக்கொண்டோம். அங்கே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்திருந்த அண்ணாமார்களும், அக்காமார்களும் கலாசார ஆடைகளில் சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்கள். யாரோ ஒரு சிறுவன் தொலைந்ததாக அறிவிப்பு நிகழ்ந்துகொண்டிருந்தது. அந்தச் சிறுவன் அழும் சத்தத்தையும் ஒலிபரப்பிக்கொண்டிருந்தார்கள். அவ்வளவு சனம் இன்றுகூடி, தேர்த்திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. நாங்களும் தேரினை இழுப்பதில் ஆர்வமாக இருந்தோம். திடீரெனத் தனுவின் தொலைபேசிக்கு அழைப்பு வந்தது. எடுத்துக் காதில் வைத்து " ஹலோ… ஹலோ… என்றான் ஒன்றும் விளங்கவில்லை, அம்மா" என்று என்னிடம் சொல்லியபடி கொஞ்சத்தூரம் நகர்ந்து சென்று ஏதோ பேசிக்கொண்டிருந்தான். நானும் அவனருகில் ஓடிச்சென்றேன்.
“டேய் கண்ணம்மா காலொண்டு முறிஞ்சபடி நடக்கேலாம வீட்டு முத்தத்தில் இழுத்து இழுத்துக் கிடக்காமடா…..வாடா போவம்….”
என்று சொல்லியபடி சைக்கிள் பார்க்கை நோக்கி ஓடினோம். சைக்கிள் பார்க்கிலிருந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு, அவனை முந்தியபடி தார்றோட்டுக்கு ஏறி வேகமாகமிதிக்கத்தொடங்கினேன். என் பின்னால் தனுவும் வேகமாகவே வீதியைக் கடந்துகொண்டிருந்தான். திடீரெனப் பெரும் சத்தம். திரும்பிப் பார்த்தேன். தனுவைக் காணவில்லை.
அதில் நின்ற சனங்களெல்லாம் தலையில் கைவைத்தபடி ஓடினார்கள். சைக்கிளை நிறுத்தித் தள்ளிவிட்டு நானும் அவர்களின் பின்னால் ஓடிச்சென்றேன். பெரிய டிப்பர் ஒன்று நடுவீதியில் நிறுத்தப்பட்டிருந்தது. டிப்பரின் சில்லுக்குள் சைக்கிள் நசுங்கிக் கிடக்க, இரத்தம் பரவி வீதியையே சிவப்பாக்கியது. சன நெரிசலுக்குள்ளால் உள்நுழைந்து அருகில் சென்றேன். “என்ரை ஐயோ!… தனு… எங்கள விட்டிற்றுப் போட்டியேடா….”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றிஸ்னா அசர்ருதீன்.
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# கருணைக்காக ஏங்கும் மனிதர்கள்

மனித வாழ்வைப் பொறுத்த வரையில் அது இலக்குகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றால் சூழப்பட்டதொரு பெரிய பரப்பு. தன்னுடைய இலக்கினை அடைய வேண்டும் என்ற அவாவுடன் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் பயணித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். பெரும்பாலும் அந்தப் பயணமானது மனித வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை முதன்மைப்படுத்தியதாகவும் இருந்து வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அத்தியாவசியத் தேவைகளைப் போலவே மனித வாழ்வில் பயணங்களும் இன்றியமையாத அம்சமாக மாறி விட்டது. இதனால் தான் மனித வாழ்வில் பயணங்கள் என்றும் ஓய்வதில்லை. நாம் அன்றாடம் எத்தனையோ பயணங்களை மேற்கொள்கிறோம். எவ்வளவோ இடங்களுக்குச் செல்கிறோம். எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களுள் எவரேனும், வாழ்வையே பயணமாகக்கொண்டு சுடும் வெயிலிலும், வீதி ஓரங்களிலும் துவண்டு கிடக்கும் பாதையோர யாசகர்களைப் பற்றிச் சிந்தித்தது உண்டா?

அவர்களின் ஒவ்வொரு நடையும் ஏதோ ஒன்றுக்காகத் தினமும் ஓயாது சென்று கொண்டு தான் இருக்கின்றது. அந்தப் பயணத்தில் அவர்கள் சலிப்புற்றாலோ, துவண்டு கிடந்தாலோ அன்று அவர்கள் பட்டினி கிடக்கவேண்டிய நிலை தான் ஏற்படும். அவர்களைப் பற்றியும் நாம் ஆழமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறான நிலைமையில் எம்மிடம் வரக்கூடிய சிலருடன் நாம் கோபத்துடன் கதைக்கின்றோம். எமக்கு ஏதேனும் சங்கடமான நிலைமைகளின்போது அவர்களைப் புறக்கணித்து தீய வார்த்தைப் பிரயோகங்களால் அவர்களது மனதைப் புண்படுத்தி விடுகின்றோம். இன்னும் சிலர் எம்மிடையே வந்து ஏதேனும் தமக்குக் கொடுக்கும்படி கேட்டால் நாம் அவற்றைக் கவனத்தில் எடுக்காது மிக சுலபமாகக் கடந்து செல்கிறோம். அவர்களும் எம் போன்ற மனிதர்களே தவிர வேறு அல்லர் என்பதும், எமக்கு இருக்கக்கூடிய அதே உணர்வுகளோடு தான் அவர்களும் இறைவனால் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் எம்மில் சிலரது அறிவுக்கு எட்டாத ஒரு விடயமாக இருந்து வருகிறது. கிடைக்கக்கூடிய இடங்களைத் தாராளமாக ஏற்றுக்கொண்டு தலை வைத்து உறங்கும் பக்குவமும், எது நேர்ந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தபடி நிம்மதி இன்றி உயிரைக் கைகளில் பிடித்துக்கொண்டு கழியும் இராப் பொழுதுகளும் விடியலின் வருகைக்காக ஏங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. கிடைக்கும் கொஞ்ச உணவில் தன் வயிற்றுப் பசியை போக்குவதா? " அம்மா! பசிக்கிறது " என்று அழுதுகொண்டிருக்கும் தன் குழந்தையின் கண்ணீர் துடைப்பதா? என்று தவித்தபடி முழுவதுமாக குழந்தையின் கண்ணீரை மட்டும் துடைத்துக் கொண்டு தன் வயிற்றை வெறுமையாக வைக்கும் உள்ளங்களும் அவர்களுக்குள் இருக்கத்தான் செய்கின்றன. இவர்கள் பற்றி அக்கறை கொள்ளும் உள்ளங்கள் எம்மில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? சூழ்நிலைகளைச் சகித்துக்கொண்டு சுக, துக்கங்களை ஏற்றுக்கொண்டு மனம் நிறையாவிடினும், வயிற்றுப் பசி தீரவேண்டும் என்ற மன ஆதங்கத்துடன் அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு சுழன்றுகொண்டுதான் இருக்கிறது. தட்டில் பத்து ரூபாவெனும் போடக்கூடிய தனவந்தர்களின் பிறந்தநாள் எப்போது வரும் என்று பார்த்துக்கொண்டிருக்கும் அளவுக்கு அவர்களின் ஆசைகளும் ஏக்கங்களும் தொடர்கதையாக நீள்கின்றன.



சுருங்கிய முகமும், நடுநடுங்கிக்கொண்டிருக்கும் கைகளும், கலங்கிய கண்களுமே அவர்கள் யார் என்பதனை எமக்கு அடையாளப்படுத்தி விடுகின்றன. அவர்கள் தம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரும், ஏதும் கடுமையாகச் சொல்லிவிடுவார்களோ? என்ற ஏக்கத்துடனேயே ஒவ்வொரு நாளையும் கடந்து செல்கிறார்கள். உண்மையில் அவர்களை எமது சமூகம் ஏதோ ஒரு வகையில் புறந்தள்ளிக் கொண்டு தான் இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் நாம் அவர்கள் மத்தியில் எதிரிகளாகத் தான் நடந்து கொள்கிறோம். அவர்களும் எம் போன்ற மனிதர்களே தவிர வேறு யாரும் அல்லர். அவர்கள் மத்தியில் பல்வேறு திறமைகளையும் முடக்கிக்கொண்டு சாதிக்கத் துடிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பணம், பணம் என்று நேரம் காலம் பாராது ஓடிக்கொண்டிருக்கும் இந்த இயந்திரமயமான உலகில், வயிறு நிறைய ஒரு பிடி சோறு கிடைத்தால் போதும் என்று எண்ணக்கூடிய அவர்கள் மத்தியில் எமது சமூகம் எங்கேயுள்ளது? நிரந்தரமே இல்லாத இந்த உலக வாழ்வில் நாம் மரணித்த பிறகு எதனையுமே எடுத்துச்செல்லப் போவது இல்லை. மாறாக ஒரு மனிதனுக்குக் கொடுக்கும் கொடையும், நல்ல காரியங்களுமே இறுதியாக எமக்குக் கை கொடுக்கும் 'அம்மா ' என்ற அவர்களின் வார்த்தைக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் மறைந்து இருக்கின்றன. வயிற்றிலும், கைகளிலும் குழந்தைகளைச் சுமந்து கொண்டு வெயில், மழை பாராது, வீதி ஓரங்களிலும், பொது இடங்களிலும் ஒரு கைப்பிடி சோற்றுக்காய் பெண்கள் தள்ளாடித் திரிவதனையும் பார்க்க உள்ளத்தில் ஏதோ ஒரு பிணி ஆட்கொண்டது போலத் தோன்றுகிறது. உச்சி வெயில் நேரங்களில் காலில் பாதணிகள் கூட அணியாத வண்ணம் சுடு மணலிலும், வீதிகளிலும் அவர்களின் கால் தடம் பதியாத இடம் எங்கு தான் உள்ளது? அடுத்த நபர்களைத் தன்னோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்களுக்கு எழக்கூடிய மன வலியை வார்த்தைகளால் சொல்லிவிடமுடியாது. பத்து மாதங்கள் சுமந்து தாம் பெற்று வளர்த்த பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களாகவும், குடும்பப் பின்னணியால் புறந்தள்ளி ஒதுக்கப்பட்டவர்களாகவும், போரில் பாதிக்கப்பட்டவர்களாகவும், அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்களாகவும் தமது வாழ்நாளை நிம்மதி இன்றிக் கழிக்கும் இவர்கள் கடவுளிடம் கேட்டுப் பெற்ற வரமா இது? ஆசைகளைத் தம்முள் அடக்கிக்கொண்டு கொடுப்பதைக் கைகள் ஏந்தி வாங்கிக் கொண்டு நடை போட ஆரம்பிக்கிறது அவர்களது வாழ்வு. தமது ஆசைகள், கனவுகள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற வார்த்தைக்கு அவர்கள் வாழ்வில் ஒரு துளியேனும் இடமே இல்லாமல் போய் விடுகிறது. கை நிறையச் சம்பாதிக்கக் கூடிய மனிதர்கள் கூட இன்றைய எமது நாட்டினுடைய பொருளாதார நிலைமை தம்முடைய வாழ்வில் பெரும் தாக்கத்தினை செலுத்தி உள்ளது என்று கூறுகையில், கொடுப்பதை எடுத்துக்கொண்டு குருவி சேர்ப்பது போல நாணயக் குற்றிகளைச் சேலை மடிப்பில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கும் அவர்களது வாழ்வில் வயிறார உணவு உண்டு பல நாளாயிற்று என்ற குரல்களும் இன்றுவரை ஒலித்துக்கொண்டு தான் இருக்கின்றன.

இவ்வாறு பல கனவுகளை, ஆசைகளைச் சுமந்து வாழும் அவர்களது வாழ்வில் இருள் நீங்கி, விடியல் பிறக்க நாம் அவர்களுக்கு எம்மால் இயன்றளவு கொடுத்து உதவுவது என்பது எம்மை சகல தீய சக்திகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளப் பக்க பலமாக இருக்கும். மாறாக அவர்களது உணர்வுகளையும், ஆசைகளையும், ஏக்கங்களையும் வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்து செல்லாமல் அவற்றுக்கு மதிப்பளித்து கொஞ்சமேனும் அவர்களை மதித்து, அன்பையும், அக்கறையையும், கரிசனையையும் காட்டப்பழகுதல் மனிதத்தை மண்ணில் துளிர்க்க வைக்கும்.

---

# சாந்தனெனும் சாகாதவரம்

பிரார்த்தனைகள்
பொய்த்துப் போனதே.!
விடியாத பொழுதொன்றுக்காய்
விடிய,விடிய காத்திருந்தது தப்பாகியது

கொடியதேசமே
கொன்றுகுவித்த வரலாற்றை
நாம் ஒருபோதும் மறவோம்.!


அட கொடும்பாவிகளே!
மன்னிப்பதாய்ச் சொல்லி சாகடித்தீரே..!

வல்லாதிக்கமே
ஒன்றைப் புரிந்துகொள்.!
வலிநிறைந்த கண்ணீர்
உனக்கு கொள்ளிக்குடம்
உடைக்கும் வரை தொடரும்.!

சாந்தன் அண்ணாவின்
வலிசுமந்த ஆத்மாவே..!

இந்த வல்லாதிக்க சகதிகளுக்கு
சாக்கடை வாழ்வை நிரந்தரமாய் திறந்துவிடு


அராஜகக்கும்பலை
அடியோடு
அழிக்கத் திடம்கொள்வாயாக



து.திலக்(கிரி), கவிட்ஸ்லாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே பழங்கனவு



○ கோகுலராகவன்

எனக்குத் தெரிந்த பத்து ஆசிரியர்களில் 4 பேர் என்ற வீதத்தில் வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இது முறையான அளவீடு அல்ல, முறையாகச் செய்தால் அதிகமாக இருக்கும். இவர்கள் அர்ப்பணிப்போடு கடமையாற்றிய ஆசிரியர்கள்,ஆசிரிய சேவைக்கு விரும்பி வந்தவர்கள். மாணவர்களால் விரும்பப்பட்டவர்கள்.

இந்த வெளியேற்றம் பெருமளவில் இலங்கையின் கல்வித் துறையைப் பாதிக்கப்போகிறது. கல்வி நடவடிக்கை நாளாந்தம் மேற்கொள்ளப்படும் செயற்பாடு. இதில் தொய்வு ஏற்படுவது நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் பிற சேவைகளை விட ஆசிரிய சேவை அறிவு விருத்தி சார்ந்தது.

இதில் ஏற்படும் வெற்றிடம் நாட்டின் அபிவிருத்தியை நாளடைவில் பாதிக்கும். அனேகமான ஆசிரியர்கள் ஆரம்பத்தில் ஐந்து வருட விடுமுறையை பெற்று வெளியேறினார்கள். ஆனால் தற்போது இந்த விடுமுறையை மாகாண மட்ட நிர்வாகங்கள் நிராகரிப்பதால் பல ஆசிரியர்கள் வேலையை கைவிட்டு விட்டு போகத் தொடங்கிவிட்டனர். இவ்வாறு ஆசிரியர்கள் மற்றும் பல அரச ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேறக் காரணம் என்ன?




தெளிவான காரணம், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி என்பதை சொல்லி தெரிய வேண்டியதில்லை.

இதற்கான ஒரு தீர்வாக அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு முன் வைக்கப்பட்டு அதில் ஐயாயிரம் ரூபா இந்த ஆண்டு தொடக்கத்தில் வழங்கப்பட்டு இருக்கிறது.தற்போதைய விலைவாசி ஏற்றத்தில இந்தத்தொகை சரியான நிவாரணமாக அமையவில்லை.

ஏற்கனவே தொழிற் சங்கங்கள் இருபதாயிரம் வரை சம்பள உயர்வைக் கோரியுள்ளமை இங்கே குறிப்பிடத்தக் கது. ஆனால் பொருளாதார மந்த காலகட்டத்தில் சம்பள உயர்வு வழங்குவது மேலும் பணவீக்கத்தையே அதிகரிக்கும்.

மாறாக பொருள்களின் விலைவாசியை குறைப்பதே இதற்குச் சரியான தீர்வாக அமையும்.இதற்கான திட்டங்கள் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆசிரியர் அல்லது இடைநிலை அரச ஊழியர் ஒருவர் இரண்டாவது தொழில் ஒன்றைத் தேட வேண்டிய நிலை தற்போதைய பொருளாதார மந்தத்தால் தோன்றி இருக்கிறது. இது கூட அரச சேவை மீதான அர்ப்பணிப்பைக் குறைக்கவும் செய்யும்.

பாடசாலைகளில் விடுமுறை காலங்களில் வகுப்பு எடுக்க ஆசிரியர்களிடம் கோரிக்கை முன்வைக்க பல பாடசாலை நிர்வாகங்கள் தயக்கம் காட்டின அல்லது முரண்பட்டன.ஆசிரியர்கள் தமது வருமானத்தில் மூன்றிலொரு பங்கை போக்குவரத்திற்காக செலவிட வேண்டி இருப்பதே இதற்கான காரணம். இலங்கை என்ற தீவை பொருளாதாரரீதியில் உயர்த்தி வைத்திருப்பதற்கான ஆற்றல் சுதந்திரத்துக்கு பின் வந்த ஆட்சியாளர்களிடம் இல்லவே இல்லை. இதற்கான வடிவமைப்பும் உருவாக்கப்படவில்லை.

இலங்கை கைத்தொழில்நாடா?விவசாயா நாடா?என்பதை எவரும் தீர்மானிக்கக் கூடிய அளவில் அளவீட்டுச் சுட்டிகளில் தாக்கம் இல்லை.

இலங்கையின் அடுத்த சாபக்கேடு எது வென்றால் அது 'ஊழல்' தான்.

மலையாள கவிஞர் சச்சிதானந்தன் எழுதுவார்.

**"நினைவில் காடுள்ள மிருகம் எளிதில் அடங்குவதில்லை"** என்று .

ஊழலைப் பொறுத்தவரை இலங்கைக்கும் இது பொருந்தும்.




ஊழலற்ற நாட்டின் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தவும் சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கை அரசுகள் தவறிவிட்டன. ஊழல் என்பது சட்டம், ஒழுங்கு என்பவற்றைத் தவறான பாதையில் கொண்டு செல்லும் ஆற்றல் கொண்டது. இவை யாவும் காலம் கடந்தவை.இலங்கையில் இன்னும் பல மூளைசாலிகள் வெளியேறப் போகிறார்கள் என்பதே உண்மை.

இலங்கையின் எதிர்காலம் யாராலும் கணிக்கமுடியாததாகி விட்டது. சிங்கப்பூர் பிரதமர் " சிங்கப்பூரை இலங்கையைப் போல மாற்றுவேன்" என்று சொன்னது ஒரு பழங்கனவு மட்டுமே.

## உணர்ப்திவம்



பாகம் 2

○ இராகவன்

29

அம்பலவாணர் மாஸ்ரரைப் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாச் சொல்லுறன். இப்ப விசயத்துக்கு வருவம். அம்பலவாணர் மாஸ்ரர் கோட்டக் கல்வி அதிகாரியாயிருக்கேக்குள்ள நடந்த கோட்டமட்ட, வலயமட்டத் தமிழ்த் தினப் போட்டிகளுக்கெல்லாம் என்னையும் ஒரு நடுவராச் 'செலக்ற்' பண்ணியிருந்தார். எனக்கெண்டால் வலு சங்கடமாப்போச்சு. என்ன செய்யிறது? அம்பலவாணர் மாஸ்ரருக்கு முகம் மறுக்கேலாமல் போச்சு. கோட்ட மட்டத் தமிழ்த் தினப்போட்டி 'சேக்கிறகாட் கொலிஜ்ஜில' (திரு இருதயக் கல்லூரி) நடந்தது. அதில "வினாடிவினாப் போட்டிக்கு நான் நடுவராப் போனனான் அதையொரு மாதிரிச் சமாளிச்சுப் போட்டன் " வலய மட்டத் தமிழ்த் தினப்போட்டி வடஇந்து மகளிர் கல்லூரியில நடந்தது.

அதுக்கு நான் நடுவராப் போகேக்குள்ளதான் ஒரு பெரிய சிக்கலுக்குள்ள மாட்டுப்பட்டன். அங்கை நவம் மாஸ்ரரும் வந்திருந்தார். அவர் தன்ர ஸ்கூல் சார்பில வந்தவராக்கும் எண்டு நான் முதல்ல நினைச்சன். சிக்கலில்லாத போட்டிகளுக்கெல்லாம் ஏற்கனவே நடுவர்மாரைச் 'செலக்ற்' செய்து, போட்டியளும் தொடங்கி நடந்து கொண்டிருந்தது. நான் போகேக்குள்ள பட்டிமன்றப் போட்டி தொடங்க இருந்தது. அம்பலவாணர் மாஸ்ரர் என்னைக் கூப்பிட்டு "பட்டிமன்றத்துக்கு நீயொராளா ஜட்ஜ் பண்ணடா" எண்டு என்னை அதுக்குள்ள புகுத்திவிட்டுட்டார்.

பட்டிமன்றம் தொடங்கேக்குள்ள பாத்தா தீர்ப்பாளர் ஆர் தெரியுமே? வேறை ஆர் எங்கடை நவம் மாஸ்ரர்தான். "இதென்னடா மதுரைக்கு வந்த சோதனை?" எண்டு நான் பதகளிக்க நவம் மாஸ்ரர் "வாடாப்பா! கேசவன்ர தம்பி" எண்டு பிரெண்ட்லியாத் தோளில தட்டிக்கூப்பிட்டார். அதுக்குப் பிறகுதான் என்ர பதகளிப்பு அடங்கிச்சுது. நான் ஏற்கனவே உங்களுக்குச் சொல்லியிருப்பன் எண்டு நினைக்கிறன். நவம் மாஸ்ரரும் வடமராட்சியின் புகழ்பூத்த ஒரு பட்டிமன்றப் பேச்சாளர்தான்.

1994 நெப்ரியூன்ஸ் ரியூட்டறியில நடந்த வாணி விழாப் பட்டிமன்றத்தில நான் இராஜேஸ்கண்ணன், தர்மதேவன், ரங்கநாதன் எண்டு கொஞ்சப்பேர் நவம் மாஸ்ரரின்ர தலைமையில பேசியிருக்கிறம். நவம் மாஸ்ரர் ஒரு முதுகலைமாணி (M.A.) பேராதனைப் பல்கலைக்கழகத்தில பேராசிரியர் அ.சண்முகதாஸோட ஒண்டாப் படிச்சவர் எண்டு கேள்விப்பட்டனான். ஏ.எல்லுக்குத் தமிழ்ப் பேப்பர் செற்பண்ணுறதில இவருமொராள் எண்டும் கதைக்கிறவை. அவரோட சின்ன வயதில பழகின, பிறகு அவரிட்டப் படிச்சது எல்லாம் எனக்குப் பெருமை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜீவன் ராம்



'மொழி ஒன்று என்றால் நாடு இரண்டு. மொழிகள் இரண்டு என்றால் நாடு ஒன்று'
டொக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா

5

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும்

**மொழி உரிமைப் பறிப்பும் தமிழ்த்தேசிய எழுச்சியும்**

சிங்கள பௌத்தருக்கு மட்டுமே இலங்கைத் தீவு சொந்தம் என்ற சிந்தனை, 1880ஆம் ஆண்டு அநகாரிக தர்மபாலாவால் முன்வைக்கப்பட்ட 'ஓரினத் தன்மை' கொண்ட சிங்கள பௌத்த இனவாதக் கருத்தியலில் இருந்து தோற்றம் பெறுகின்றது. இந்தக் கருத்தியல் தாக்கத்தால் 1910ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சுயமொழி பற்று சிங்களவர் மத்தியில் உருவாக்கம் பெற்றது. குறிப்பாக இந்தக் காலப்பகுதியில் புதுவருடக் கொண்டாட்டங்களின் போதும் ஏனைய நிகழ்ச்சி நிரல்கள், அழைப்பிதழ் எனச் சகலதிலும் சிங்களமொழியை பிரயோகிக்கும் பழக்கம் சிங்கள மக்கள் மத்தியில் உருவாகியிருந்தமையை அவதானிக்க முடிக்கின்றது.

சிங்களவர்களின் சுயமொழிப் பற்றின் அதியுச்ச வெளிப்பாடாக 1922 ஆம் ஆண்டு முனிதாச குமாரதுங்க எனும் சிங்களவர் அரச மொழியாக சுயமொழி இருக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். உண்மையில் இவர் கூறிய சுயமொழி என்பது சிங்கள மொழி என்றும், தனிச்சிங்கள மொழியில் அரசமொழி இருக்க வேண்டும் என்ற கருத்தியலையே அவர் வெளிப்படுத்தினார் என்றும் இலங்கை வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும் இந்தக் கோரிக்கை அக்கால பிரித்தானிய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது.

**இருமொழிக் கொள்கை வரலாற்றுத் திரிபுகளும்**

பிற்பட்ட காலத்தில் இரு மொழிக் கொள்கையை இரு இனத்தவரும் ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாகியதால் தனிச் சிங்களக் கோரிக்கை செயலற்றுக் கிடப்பில் கிடந்தது. கிடப்பில் கிடந்த இந்தக் கோரிக்கையை 1944 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனிச்சிங்களப் பிரேரணையாக அரசாங்க சபையில் முன்மொழிந்தார். எனினும் இந்தப் பிரேரணையை அன்றைய சூழ்நிலையில் தமிழ்த் தலைமைகள் மட்டுமல்லாது சிங்களத் தலைமைகளும் ஒன்றிணைந்து எதிர்த்தன . இதனால் ஜே.ஆரின் தனிச்சிங்கள பிரேரணை திருத்தப்பட்டு சிங்களத்துடன் தமிழும் அரசகரும மொழியாக வேண்டும் எனும் திருத்தத்துடன் நிறைவேற்றப்பட்டது. துளிர்விட்ட தனிச்சிங்களக் கோரிக்கையை எவ்வாறாயினும் நிறைவேற்ற வேண்டும் என சிங்கள பௌத்த தேசியவாதிகள் விரும்பினர்.

இன, மத, மொழிப்பற்றை சிங்கள மக்கள் மத்தியில் மேலோங்கச் செய்வதன் மூலமே சிங்கள பௌத்த தேசியவாத உணர்வைப் பலப்படுத்த முடியும் எனக் கருதினர். அதற்கான நிகழ்ச்சிநிரல்களை உருவாக்கவும் செயற்படுத்தவும் ஆரம்பித்தனர். அதன் ஒரு பகுதியாக இலங்கையரின் இனவரலாற்றை சிங்கள வரலாற்று ஆய்வாளர்களின் துணைகொண்டு திட்டமிட்டு திரித்தெழுத ஆரம்பித்தனர். புதிதாகத் திரித்தெழுதப்பட்ட இலங்கை வரலாற்றின் மூலம் சிங்களவர் மட்டுமே இலங்கையின் பூர்வகுடிக்கள் எனும் கருதியல் சிங்கள மக்கள் மனதில் விதைக்கப்பட்டது.

மறுபுறம் 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மொழி ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்கிய ஆதர் விஜயவர்த்தனா போன்றோரும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அரசாங்கசபையில் முன்மொழியப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்துக்கு ஆதரவாக தமது கருத்துகளை முன்வைக்க ஆரம்பித்தனர். தனிச்சிங்களச் சட்டத்துக்கு ஆதரவாக பல இயக்கங்கள் உருவாகின. அதில் சிறிலங்கா ஜாதிக பெரமுன, உடறட்ட பெரமுன, சிங்கள ஜாதிக சங்கமேய போன்ற இயக்கங்கள் முக்கியமானவை.

**தமிழரசு தொடர்பில் தவறான பரப்புரைகள்**

அதேசமயம் தமிழரசுக் கட்சியின் உருவாக்கம், தமிழருக்கான தனிநாட்டை அமைப்பதையே நோக்கமாக கொண்டது என்ற கருத்தியல் சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டது. இந்தக் கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் 1952 ஆம் ஆண்டுத் தேர்தல் பரப்புரையின்போது, தமிழரசுக் கட்சிக்கு எதிரான கருத்தை முன்வைப்பதற்காக ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியினர், தமது கட்சிக்கு ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி என்றும், தமிழில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றும் இரு வேறுபட்ட பெயர்களைச் சூட்டி, இரட்டை வேடமிடுகின்றனர். இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னும் பெயரில் உள்ள 'அரசு' என்ற சொல் தமிழில் 'தனியரசு' என அர்த்தையே வெளிப்படுத்துகின்றது. ஆங்கிலப் பெயரான 'பெடரல் பார்ட்டி' (Federal Party) என்ற சொல் குறிப்பதைப்போல 'சுயாட்சிப் பிரதேசம்' அல்ல' எனக் கூறினார்.

சிங்களவருடன் இணக்க அரசியல் செய்து, தமிழருக்கு சலுகை பெற்றுக் கொடுத்த ஜீ.ஜீ.பொன்னம்பலம், வாக்கு அரசியலுக்காக அன்று தமிழரசுக் கட்சிக்கு எதிராக முன்வைத்த இந்தக் கருத்தியலாலேயே சிங்கள மக்கள் மத்தியில் "தமிழர்கள் தனிநாட்டை உருவாக்க முயல்கின்றனர். இலங்கைத் தீவை இரண்டாக உடைக்க முற்படுகின்றனர். சமஷ்டி என்பது தனிநாட்டுக்கான ஆரம்புள்ளியாகும்"' என்ற எண்ணத்துடன் கூடிய தமிழர்களுக்கு எதிரான மனோநிலை உருவாகியது.

இதனால் சிங்கள பௌத்த தேசியவாதிகள் விரும்பியதைப்போல தனிச்சிங்கள கோரிக்கை சிங்கள மக்கள் மத்தியில் இருந்து இயல்பாக வெளிப்பட ஆரம்பித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உருவாக்கமும் தனிச்சிங்கள சட்டமும் தனிச்சிங்கள கோரிக்கை சிங்கள மக்கள் மத்தியில் வலுப்பெற்றிருந்த காலப்பகுதியில், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா, சேனநாயக்க குடும்பத்துடன் ஏற்பட்ட அதிகாரப்போட்டியின் நிமித்தம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார்.

வெறும் பதவி ஆசைக்காக கட்சி உருவாக்கி தேர்தலில் வெற்றிபெற முயுமா? எனச் சிந்தித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, சிங்கள மொழிக்கு உரிய அந்தஸ்தையும் பௌத்த மத மறுமலர்ச்சியையும் அடைவதே தமது கட்சியின் முதன்மை நோக்கம் என்றும், இதன் மூலமே சிங்கள இன மகிமையை இந்தத் தீவில் நிலைநாட்ட முடியும் எனவும் கூறினார். இலகுவாகச் சொன்னால், சிங்கள மக்களின் மொழிப்பற்றையும் மதப்பற்றையும் கொண்டு சிங்கள பௌத்த தேசிய உணர்வை தமது கட்சிக்கான வாக்குகளாக மாற்ற பண்டாரநாயக்கா முற்பட்டார்.

**வரலாற்றுத் திரிபுகளால் வஞ்சிக்கப்பட்ட இலங்கை**

இந்தக் காலகட்டத்தில் டி.சி. விஜயவர்த்தனவினால் 'விகாரையில் புரட்சி' என்ற நூலும் எழுதி வெளியிடப்பட்டது. பௌத்த மதத்தின் 2 ஆயிரத்து 500 ஆண்டு கால நினைவைக் குறிக்கும் புத்த ஜயந்தியை ஒட்டி எழுதப்பட்ட இந்த நூலில், சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கான அவசியம் பற்றி அவர் வலியுறுத்தி இருந்தார். அதுமட்டுமல்லாது இலங்கை வரலாற்றை திரித்தெழுதி, சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே இலங்கைத் தீவு சொந்தமானது என்ற கருத்தியலையும் இந்த நூல் மூலமாக வெளிப்படுத்தியிருந்தார். இவ்வாறான தீவிர சிங்கள பௌத்த சிந்தனை கொண்ட சிங்கள வரலாற்றாசிரியர்களின் வரலாற்றுத் திரிப்புகள், சிங்கள இனம், பௌத்த மதம், இலங்கை தீவு ஆகிய மூன்றையும் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கின.

இந்தச் சிந்தனை, சிங்களத் தேசியவாத உணர்வை மேலும் பலப்படுத்தியது. சிங்கள இனத்தின் இருப்பைப் பாதுகாக்க வேண்டுமென்றால் தமிழ் இனத்தை சிதைத்து அழிப்பது தவறில்லை என்ற தீவிர சிங்கள பௌத்த தேசியவாத உணர்வு தோற்றம் பெறவும் வழிவகுத்தது.

இதன் விளைவே 1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் மொழியை மையப்படுத்திய சிங்களத் பௌத்த தேசியவாத அரசியலுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இவ்வாறு சிங்களத் தேசியவாத உணர்வெழுச்சியால் பிரதமர் பதவியை கைப்பற்றிய பண்டாரநாயக்கா, சிங்களமொழி மட்டுமே அரச கரும மொழியாகும் என்ற தனிச்சிங்கள சட்டத் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

இதனால் இலங்கைத் தேசிய நீக்க அரசியல் செய்த அரசியல்வாதிகளில் உயர்வான இடத்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தனதாக்கிக் கொண்டார். ஏனெனில், அதுவரை காலமும் வெறும் கோரிக்கையாக இருந்த தனிச்சிங்கள சட்டத்துக்கு சட்ட அந்தஸ்தை வழங்கியவர் இவரே.

**மேலைத்தேய கட்டமைப்பை இறுகப்பிடிக்கும் இலங்கையர்**

இங்கு வேடிக்கை என்னவென்றால் சிங்களத் தலைமைகள் குறிப்பாக பண்டாரநாயக்கா போன்றார் மேலைநாட்டு மொழியையும் கலாசாரத்தையும் எதிர்த்த அதேவேளையில் பிரித்தானியரால் இந்தத் தீவில் உருவாக்கப்பட்ட அரசியல் கலாசாரத்தை மட்டும் கட்டிக்காக்க முற்பட்டமைதான்.

ஆரம்ப காலத்தில் இந்தத் தீவில் மூன்று இராச்சியங்கள் இருந்தன. அந்த இராச்சியங்களை ஒன்றாக்கி, இலங்கை எனும் நாடாக பிரித்தானியரே கட்டமைத்தனர். மேலை நாட்டு மொழி கலாசாரத்தை எதிர்த்த இந்த சிங்களத் தலைமைத்துவம் தமிழ் இனத்தை மட்டும் ஏன் பிரித்தானியர் உருவாக்கிய ஆட்சிமுறைக் கட்டமைப்பை பயன்படுத்தி அடிமைப்படுத்த முயல்கின்றனர்?. தனித்து சிங்கள இன இருப்பை மட்டுமே இந்தத்தீவில் பாதுகாப்பது உங்கள் நோக்கம் எனின் யாழ்ப்பாண இராச்சியத்தை அதாவது 'வடக்கு? கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பகுதியை' ஆரம்பகாலத்தில் (பிரித்தானியர் வருகைக்கு முன்னர்) இருந்ததைப் போல தனியாக இயங்க அனுமதித்திருக்க வேண்டும் அல்லவா?

கண்டிச்சிங்களவரையும் கரையோரச் சிங்களவரையும் இரண்டறக் கலந்த சிங்களத் தேசியவாதிகள், தனக்கென தனித்துவமான மொழி, கலாசார பண்பாட்டை கொண்ட தமிழ் இனத்தை சிதைத்து அழித்து இந்தத் தீவை சிங்கள பௌத்த நாடாக உருவாக்கலாம் எனத் திட்டமிட்டனர். அந்த நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த தனிச்சிங்களச் சட்டம் துணை புரியும் எனக் கருதினர். ஆனால் வரலாறு அவ்வாறு அமையவில்லை. தமிழர்களின் இன இருப்பை பாதுக்காக்க தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வு வலுப்பட ஆரம்பித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org